சுதந்திரன்
SUTANTIRAN
தொலைபேசி: 23411 விலை சதம் 25
வள்ளுவர் ஆண்டு 2004, ஐப்பசி 12 உ (28-10-73) ஞாயிறு ஷவ்வா: ஆகிர் 1 —புத்தகம் 27 இதழ் 9

## இந்திய அரசே! இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்புக் கொடு!

தமிழக மாணவர் தீர்மானம்!

''இன்னலுறும் இலங்கை வாழ் தமிழர்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்க இந்திய அரசு தன்னுலியன்ற அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்—''

—(5-ம் பக்கம் பார்க்க)

### தமிழர் உரிமைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயலாமல்

# பிரதமர் வடக்கே சென்றால் ஹர்த்தால் நிச்சயம்!

"தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண எந்தவித முயற்சியும் எடுக்காமல் பிரதமர் யாழ்ப்பாணம் வருவாராஞல் — தமிழ் மக்களின் வெறுப்பையும் அதிருப்தியையும் அவருக்கு எடுத்துக்காட்டும் முகமாக இதுவரை யாருக்கும் நடக்காத முறையில் பிரமாண்டமான எதிர்ப்பு ஹர்த்தால் ஒன்றை தமிழர் கூட்டணி நிச்சயம் நடத்தியே தீரும்—"

—இவ்வாறு தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு அந்தரங்கமாக முடிவு செய்திருப்பதாக தெரிய வருகிறது.

பிரதமர் எப்பொழுது வந்தாலும் இந்த ஹர்த்தால் நடைபெற்றே தீரும் என்று தமிழர் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளையில் தமிழ் இளைஞர் பேரவையும் பிரதமர் வருகையை எதிர்த்து சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக தெரியவருகிறது.

வடக்கில் புதிதாக தோன்றியுள்ள 'வெள்ளை அக்டோபர் இயக்கமும்' பிரதமர் வருகையை பகிஷ்கரிக்கும்படி துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளது.

## தமிழர் கூட்டணி எதிர்ப்புக்கு கைமேல் கிடைத்த பலன்!

இம்மாதம் 27ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருந்த பிரதமரின் விஜயம் கடைசி நேரத்தில் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இதற்குக்காரணம், யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் பரவிவரும் காலரா நோய் என்று பொதுப்படையாகக் கூறப்பட்டபோதிலும், பிரதமரின் விஜயத்துக்கு தமிழர் கூட்டணி காட்டிய எதிர்ப்பே உண்மையான அந்தரங்கக் காரணம் என்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது:

21.10.73ல் யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு, பிரதமரை வரவேற்பதற்கு எடுக்கப்பட்டுவந்த நடவடிக்கைகளைக் கண்டித்தும்—இன்றைய சூழ்நிலையில் வடக்கே வரவேண்டாம் என்று பிரதமரைக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

இதை மீறி பிரதமர் வந்தால், ஹர்த்தால் நடத்தி கடுமையான எதிர்ப்பை பிரதமருக்கு தெரிவிக்கவும் தமிழர் கூட்டணி ஏற்பாடு செய்துவந்தது!

இந்நிலையில் பிரதமர் விஜயம் ரத்துசெய்யப்பட்டது, கூட்டணியின் எதிர்ப்புக்குக் கிடைத்த வெற்றியென்றே சொல்லப்படுகிறது.

## பன்குளத்தில் தமிழர்கள் பரிதவிப்பு!

பன்குளப் பகுதியில் அமரர் இராசவரோதயஞரின் முயற்சியால் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட செய்கைக் காணிகளை, சிங்களவர்கள் திடுதிப்பென்று ஆக்கிரமித்துக் கொள்கின்றூர்கள். காணிக்குரியவர் இதுபற்றிக் கேட்டால் காணிப்பகுதியினர் தாம் தங்களுக்குத் தந்ததாக முரட்டுப் பதிலளிக்கிறூர்கள் அந்த ஆக்கிரமிப்பாளர்கள்.

உடனே இதுபற்றித் திருமலை விரைந்து காணியதிகாரிகளைக்கண்டு கேட்கும் அந்த அப்பாவித்தமிழர்களுக்கு அங்கு கிடைக்கும்பதிலோ, தமக்குத் தெரியாது என்பதும் நாளை வா! மறுதினம் வா! என்பவையுமாகும்!

இதஞல் அந்த அப்பாவி மக்கள் காணியை இழப்பது மட்டுமின்றி நேரத்தையும் இழந்து இ. போ. ச.வுக்கும் பணத்தைக்கொட்டி திருமலையில் ஒருகாலும் பன்குளத்தில் ஒருகாலுமாக ஓடுகிறூர்

## தமிழ் இளைஞர் பேரவை உண்ணுவிரதம் ஒத்திவைப்பு!

'பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ'' என்று சுதந்திர தேவியை நோக்கி பாரதிபாடியதுபோன்று தங்கள் சுதந்திரத்துக்காக போராடிவரும் தமிழ் மக்களை காலரா நோய் கொடுமைப்படுத்திவருவதன் காரணமாக, தமிழ் இளைஞர் பேரவை தமிழ் ஈழத்தில் நடத்திவந்த தனது 50 நாள் உண்ணுவிரதத்தை 26.10.73 முதல் பின் போட்டுள்ளது.

## தமிழ் கடிதங்களுக்கு தமிழில் பதில்; பிரதமர் உத்தரவு எதுவும் இடவில்லை!

### சிந்தாமணிச் செய்திக்கு சிறிமா மறுப்பு!

'தமிழ்க் கடிதங்களுக்கு தமிழில் பதில் எழுதத் தவறும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கையெடுக்க அமைச்சர்களுக்கு பிரதமர் சிறிமா கண்டிப்பான உத்தரவு' எனும் தலைப்பில் 23-10-73 சிந்தாமணியில் வெளியிடப்பட்டுள்ள செய்தியை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா முற்றுக மறுத்துள்ளார்.

குறித்த சிந்தாமணி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதுபோல தமிழில் பதில் அளிப்பது சம்பந்தமான எந்த உத்தரவையும் தாம் பிறப்பிக்கவில்லையென்று பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரதமர் தெளிவாகக் கூறியிருக்கிறூர்.

பிரதமருக்கு காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் 25-9-73ல் அனுப்பிவைத்தகடிதம் வருமாறு:-

'தமிழ்க்கடிதங்களுக்குத் தமிழில் பதில் எழுதத் தவறும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை. அமைச்சர்களுக்குப் பிரதமர் சிறிமா கண்டிப்பான உத்தரவு' எனும் தலையங்கத்துடனும் உங்கள் படத்துடனும் சிந்தாமணியில் வெளிவந்த செய்தியினை இதனுடன் இணைத்துள்ளேன்.

இச்செய்தி கூறுவதுபோல நீங்கள் அமைச்சர்களுக்கு இவ்விடயம்பற்றிக் கண்டிப்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜெயக்கொடி கோரிக்கையை அரசாங்கம் ஏற்றது!

மன்ஞர், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றங்கள் தமிழில் இயங்குவதால், இந்த மாவட்ட நீதிமன்றங்களின் நிர்வாகத்தை சிங்கள மொழியில் இயங்கும் அனுராதபுர உயர் நீதிமன்றத்துக்கு பொறுப்பளிப்பது பொது மக்களுக்கு தொல்லையளிப்பதாக இருக்குமென்றும், ஆகவே மேற்கண்ட மூன்று மாவட்ட நீதிமன்றங்களில் நிர்வாக வேலைகளை யாழ் உயர் நீதிமன்றத்தின்கீழ் கொண்டுவருவதே பொருத்தமானதென்றும், நீதிபரிபாலன மசோதா மீது பேசிய உடுப்பிட்டி பா. உ. ஜெயக்கொடி

(5-ம் பக்கம் பார்க்க)

## 'ஈழத் தமிழர்களின் இலட்சியம் வெல்க'

### அண்ணுவின் 'காஞ்சி' ஏடு வாழ்த்துகிறது இப்படி!

பேரறிஞர் அண்ணு அவர்களை நிறுவனராகக் கொண்டு வெளிவரும் 'காஞ்சி' ஏடு அதன் 7-10-73 ஆசிரியத் தலையங்கத்தில் 'ஈழத் தமிழரின் இலட்சியம் வெல்க' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியுள்ளது:—

தரணியிலே 'பரணி' பாடிய இனம், தமிழ் இனம்; காசினியில் உள்ளோரெல்லாம் 'காட்டு மிராண்டி' களாக வாழ்ந்த காலத்திலேயே, [illegible] வாழ்வைக் கண்ட இனம், கன்னித் தமிழ் இனம்.

வையகத்தில் உள்ளோர் வாழத்தெரியாமல் வாழ்ந்து வதைபட்டுக் கொண்டிருந்த காலத்தில், வகையோடும் வளமோடும் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரிய ஒரே இனம், தமிழ் இனம்.

காடு திருத்துவதில், 'நாடு' ஆக்குவதில் 'தனக்கு நிகர் தானே' எனத் தரணியில் திகழ்ந்த தனித் தன்மை

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# தமிழாராய்ச்சி மாநாடும் தமிழர் கடமையும்

என் மகன் அழகானவனும் ஆற்றல் வாய்ந்தவனும் அறிவுடையவனும் விளங்குகின்றபோது யான் அவனின் பெருமையைப் பேசுவது தவறல்ல. அதுபோன்றே தமிழராகிய நாமும் தமிழின் தொன்மையைப் பற்றி—அதனின் பெருமையைப் பற்றி—அதன் எல்லையற்ற சொல் வளத்தைப் பற்றி—பொருட் பொலிவைப் பற்றிப் பேசுவதை எவரும் குறைகூறமுடியாது. காரணம் தமிழுக்கு முன்பு கூறப்பட்ட சிறப்புக்கள் அனைத்தும் உண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் தமிழின் பெருமையை—தமிழனின் பெருமையை தாரணி வாழ் அறிஞர்கள் ஆழ்ந்த ஆய்வின் அடிப்படையில் சமன்செய்து சீர்தூக்கி நடுநிலை பிறழாது தமிழனின் மாண்பை — தமிழின் பண்டைப்பெருமையை எடுத்துக்கூறும்போது அக்கூற்றுகள் தனிச் சிறப்புப் பெறுகின்றன. இந்த அரும் பெரும் வாய்ப்பினை அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு எமக்கு நல்கின்றது: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு எமக்கு நல்கின்றது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முதலாவது மாநாடு 1966ல் கோலாலம்பூரில் கோலாகலமாக நடைபெற்றது. இதனையடுத்து இரண்டாவது மாநாடு 1968ல் தமிழ்நாட்டில் தனிச்சிறப்போடு உலகின்கவனத்தைமுழுமையாக ஈர்க்கின்ற முறையில் நடைபெற்றது. 3ம் மாநாடு நவநாகரிகத்தின் எடுத்துக்காட்டாக விளங்கும் பாரீசில் பாங்குடன் நடைபெற்றது: 4வது மாநாடு ஈழத்தமிழ் மண்ணில் எம்மவர் இதயத்தை ஈர்க்கும் முறையில் யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு சனவரி 3ம்நாள் தொட்டு 9ம் நாள் வரை மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

கோலாலம்பூரில் நடைபெற்ற மாநாட்டில் 21 நாடுகளில் இருந்து ஏறக்குறைய 200 பேராளர்கள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டில் நடைபெற்ற மாநாட்டில் 40 நாடுகளில் இருந்து 420 பேராளர்கள் கலந்து கொண்டனர்.

பாரிசில் நடைபெற்ற மாநாட்டில் எண்ணிக்கையில் ஏற்றம்பெற்ற அறிஞர்கள் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மையெனினும் எண்ணத்தில் பெற்ற அறிஞர்கள் கலந்துகொண்டு ஆய்வுரைகள் நிகழ்த்தினர்கள் 'ஈழத்தில் நடைபெறும் இம் மாநாட்டில் வெளிநாட்டிலிருந்து ஏறக்குறைய 300 பேராளர்களும் உள்நாட்டிலிருந்து 100 பேராளர்களும் கலந்துகொண்டு பலதுறைகளில் ஆய்வுரை நிகழ்த்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

இம்மாநாட்டில் எம் பண்டைய பெருமையை எடுத்துக்கூறும் வகையில், எம்மினத்தினதும், எம்மொழியினதும், எம் நாட்டினதும் வரலாறு ஆராயப்படும். எம் பண்டைய பண்பாடும் நாகரிகமும் பாரெங்கும் பரவிய பாங்கும், எம்முன்னோர் கொண்டொழுகிய தொன்மை நெறியின் தன்மை துருவ ஆராயப்படும். கல்வெட்டுகள் எடுத்துக்காட்டும் வரலாற்று உண்மைகள் உணர்த்தப்படும். கிராமிய இலக்கியத்தின் இனிய இயல்புகள் எடுத்து இயம்பப்படும். மேற்குறித்த இவை எமது பண்டையப் பெருமையைப் பேச துணைநிற்கையில் காலத்தின் கருத்தோட்டத்திற்கமைய எம்மொழியிலே புது வளம் காண — அறிவியல் மருத்துவம் கலைச்சொல்லாக்கம் மொழிபெயர்ப்பு முதலிய துறைகள் மிகப் பொலிவுடன் துலங்கும் முறையில் ஆய்வுகள் நடாத்தப்படும்: சுருங்கக்கூறி விளங்க வைக்கின் 1974ல் ஈழத்தில் நடைபெறவிருக்கும் மாநாடு ஈழம்வாழ் தமிழினத்திற்கு இன்றைய சூழ்நிலையில் ஏற்படுத்தவேண்டிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியே தீரும் என்பதற்கு எதுவித ஐயமுமில்லை.

வேறு சொற்களில் விளம்பின் நானிலத்து நல்லறிஞர் கலந்துகொள்ளும் இந் 4வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஈழத் தமிழினத்தின் வரலாற்றின் ஒரு திருப்புமுனையாகவும் அமையக்கூடும். இன்று தமிழன் தாழ்ந்ததற்கு தமிழனுக்கு தன்வரலாறு தெரியாது என்று கூறப்படும் கூற்றில் பேருண்மையுண்டு. இக்குறையை ஓரளவு போக்கி தமிழன் தன் நிலையை உணர தன் வரலாற்றை அறிய — இம்மாநாடு பெருந்துணையாய் அமையும் என்பதில் எமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு,

**ஈழவேந்தன்**

இம் மாநாடு வெற்றிபெற ஈழம் வாழ் தமிழறிஞர்களின் பங்கும் தமிழ்ப் பெருங்குடிமக்களின் பங்கும் மிகப்பெரிதாய் அமைந்துள்ளது தகமை வாய்ந்த கட்டுரைகள் இம் மாநாட்டுக் கருத்தரங்கில் இடம்பெறச் செய்வது தமிழறிஞர்களின் கடன். இம் மாநாட்டில் படிக்கப்படும் இக்கட்டுரைகள் காற்றோடு கலக்கும் வெறும் பேச்சுக்களாய் அமையாது வரலாற்றுக் கருவூலமாக அவை வடிவெடுக்கும் முறையில் அவற்றினை நூல் வடிவாக்கித் தருவது இவ்வறிஞர்களின் கடமையாகும். எம் வழித்தோன்றல்களுக்கு நாம் விட்டுச் செல்லும் முதுபெரும்சொத்தாக இவை விளங்கவேண்டும்.

நடைபெற இருக்கும் மாநாடு ஒரு சிற்றூரில் நடைபெறும் சிறு விழா வல்ல. இந்நாட்டிற்கே உரிய வெறும் தேசிய விழாவுமல்ல அனைத்துலக அறிஞர்கள் அனைவரும் ஒன்று கூடி நடாத்தும் அறிவு விழாவாக விளங்கப்போகிறது. இம் மாநாட்டுக் கருத்தரங்கு அறிஞர்களின் அறிவுப் பசியை தீர்த்து நிற்பது அதன் முக்கிய கடமையாக அமைகிறதெனினும் தமிழ் மக்களின் உணர்ச்சிப் பசியும் ஓரளவு தீர்க்கப்படும் விழாவாகவும் இது அமையவேண்டும். ஆகவே இம் மாநாடு வெற்றிபெற தமிழறிஞர்கள் — தமிழ் வணிகர்கள் — தமிழ்ப்பொது மக்கள் ஆகியோர் அனைவரின் உள்ளமொன்றிய ஒத்துழைப்பு இன்றியமையாத பண்பாய் அமையவேண்டும். தமிழ் மக்களிடையே எத்தகைய கருத்து வேற்றுமைகள் எத்துறையில் விளங்கினும் தமிழன்னைக்கு எடுக்கும் விழாவாக இது அமைகிறது என்பதை எண்ணி ஒற்றுமைக் குரல் ஒலித்து ஒன்றுபட்டு இவ்விழா வெற்றிபெற உழைத்தல் வேண்டும்.

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்று வள்ளுவன் கூறிய கூற்று பொருள் பொதிந்த கூற்றாகும். எம் வாழ்க்கை வளம்பெற எவ்விதம் பொருள் துணை நிற்கிறதோ அதுபோல் இம் மகாநாடும் மாநிலத்தார் மனத்தைக் கவரும் முறையில் விளங்கவேண்டுமெனின் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும தம்மால் இயன்றளவு நிதியுதவி உடலுதவி ஆகிய உதவிகளை அளித்து இம் மாநாடு வெற்றிபெறத் துணைநிற்கவேண்டும்: பொருளாதார நெருக்கடியால் நெருக்குண்டு தொல்லை பலவற்றிற்கு நாம் ஆளாகியுள்ளோம் என்பதை நாம் மறுக்கவில்லை.

எனினும் இம் மாநாடு சிறப்புற அமையவேண்டின் —எம் சிந்தையை ஈர்க்கும் முறையில் அமையவேண்டின் —நாம் விரும்பிய பயனைப் பெறவேண்டின் — எம் துன்பங்கள் — துயரங்களை ஓரளவாகுதல் மறந்து எம்மை வாழ்விக்கும் மாநாடாக இம் மாநாட்டைக் கருதி உள்ளத்தூய்மையோடு — துணிவோடு இறங்கிச்செயலாற்றிப் பெற்றிவீட்டுவோமாக தமிழன் தன்னை உணரத் துணை நிற்கும் இம் மாநாடு தமிழன் வாழ்வில் புதியதொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியே தீரும் என்பதால் எமக்கு எல்லையற்ற நம்பிக்கையுண்டு.

# சங்கப் பலகை

## வரப்பெற்றோம்

விவேகானந்தன்,

கொழும்பு விவேகானத்த சபை வெளியீடு,

34 விவேகானந்த மேடு,

கொழும்பு-13.

கொழும்பு விவேகானந்த சபையின் வெளியிடான 'விவேகானந்தன் கிடைக்கப் பெற்றுள்ளோம்:

'கடுகு சிறிதெனினும் காரம் கூட' என்பதற்கமைய விவேகானந்தன் அளவில் சிறியதாயினும் உள்ளடக்கத்திற் பெரியதாய் விளங்குவது உறுதி என்ற இதழாசிரியரின் கூற்றிற்கமைய விவேகானந்தன் பல சுவையான பகுதிகளுடன் வெளிவந்துள்ளது.

விவேகானந்த சபையின் பல்துறைப் பணியின் பங்கினை ஆசிரியர் தமக்கேயுரிய தனி நடையில் சுவைபட எடுத்தியம்புகிறார் ஆசிரியரின் தலையங்கத்தை நாம் படிக்கும்போது சிவநெறி தழுவி நிற்கும் செந்தமிழர் அனைவரும் இச் சபையில் அங்கம் வகிப்பது மிக மிக இன்றியமையாதது என்ற உணர்பு இயல்பாக ஏற்படுகிறது.

இன்றைய எம் சூழ்நிலையை நினைவில் வைத்து ஆசிரியர் உதிர்த்துள்ள கருத்துக்கள் அழகும் ஆழமும் மிக்கதாய் விளங்குகின்றன. ஆசிரியர் தன் நடையில் மொழியின் தூய்மைகாக்கத் துடிக்கிறார் என்பதோடு அந்தத் தூய்மையோடு எளிமையையும் இணைத்து எழுச்சியூட்ட விழைகிற தன்மையையும் காணமுடிகிறது.

'நாளும் நம்பியாரூரன் நாமம் நவின்றால் நலம் பெறலாமே' என்ற தலைப்பில் ஈழவேந்தன் வரைந்துள்ள தொடர் கட்டுரை அவரது ஏற்றம் மிக்க நடைக்கும் ஆய்வுள்ளத்திற்கும் நல்ல எடுத்துக்காட்டாகும்.

இதே கட்டுரையாளர் குறிஞ்சிக் குமரன் கோவிலில் 'சமயப் பணியும் சமுதாயப் பணியும்' எனும் தலைப்பில் நிகழ்த்திய உரையின் சுருக்கம் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. இவ்வுரையில் காலத்திற்குத் தேவையான புரட்சி பூக்கும் புதுமைக் கருத்துக்கள் ஒளிவிடுவது சிந்தனைக்கு விருந்தாய் அமைந்துள்ளது.

# துரியோதன உணர்வுகள்

— எ. நவரத்தின ராசா குரூஸ் —

நீண்ட பல நாட்களாக
நினைவிழந்து வாழ்ந்திட்டேன்
நினைவு திரும்பியதும்
என் இதயம்:—
ஏனோ அழுகிறது.
நீயோ:—
பொறுத்துப் பொறுத்து
பொலிவிழந்து வாழ்கிறாய்.
உன்னுடைய:—
குறையா அழகையையும்;
சிதையா இளமையையும்:
தாசாக எண்ணி:—
உன்னை ஏளனம் செய்கிறார்கள்.
நீயோ:—
பொறுத்து, பொறுத்து
பொலிவிழந்து வாழ்கிறாய்.
எப்படியோ புகழ் படைத்து
வாழ்ந்திட்டாய்

ஆனால்;—
சில விசுவாமித்திர உணர்வுகளுக்கு
அரிச்சந்திரப்பலியாக மாறி
சுடலை வரை துரத்தப்பட்டு விட்டாய்.
உன்னுடைய:—
ஆற்றலைக் காட்டி உன்னால்
எப்படியோ வாழ முடியும்.
ஆனால் நீயோ:—
பொறுத்துப் பொறுத்து
பொலிவிழந்து வாழ்கிறாய்.
நான்:—
அந்நியர் வீட்டில் உறவாடி
அடித்து விரட்டப்பட்ட போது.
உன் வீடு நினைவு வர ஓடி வருகின்றேன்.
அம்மா:——
உன் வீட்டில் கொடி இல்லை;
கோபுரம் இல்லை;
குவிந்திருந்த செல்வம் இல்லை.
எல்லாமே பறித்தாகி விட்டது.
ஆனால்:—
நீ மட்டும் இன்னும்
மோகனப் புன்னகையில் மூழ்கி
இருக்கிறாய்.
உன்னுடைய ஒரு விரலையும் அசைக்காமல்
இன்னும் நீ:—
பொறுத்துப் பொறுத்து.
பொலிவிழந்து வாழ்கிறாய்.
இன்றோ:—
உன்னைத் தாழ்த்திப்பார்க்கிறார்கள்.
யாரவர்கள்:—
உன் உதரத்தே பிறந்திட்ட
பத்து தலைமுறையின் பின்
பார்த்த மொழிகள்:—
நீ கொடுத்த நிலத்தினில்
ஊரும் சிறு புழுக்கள்.
ஆனால்:—
அவர்கள் குழிப்பக்கம்
கோல் காட்ட இன்றும்
நீ—
பொறுத்துப் பொறுத்து
பொலிவிழந்து வாழ்கிறாய்.
இந்தக் காலத்திலும்
நீ;—
உனக்குப்பிடித்தமான
அகிம்சை நூலையே படிக்கிறாய்:
பாரத நூலை மீண்டும் படித்துப்பார்
அதிலே நீ:—
வனவாசப் பகுதியை முடித்துவிட்டாய்.
இன்று;—
ஐந்து வீடு கேட்கின்ற கிருஷ்ணன்
தூதில் நிற்கிறாய்.
துரியோதன உணர்வுகள் இன்னும்
சாகவில்லை.
ஆகவே அடுத்தபக்கங்களைப் புரட்டு.
உன் உதரத்திலே பிறந்து எங்கேயோ
அலைந்த
தண்டனைக்காக நான்;
களப் பலிக்களத்தின்
கதாநாயகன் ஆகின்றேன்.
உள்ளம் அழுகின்றது ஏனோ
என் நினைவு திரும்பியது.

# உதித்தது உதய தாரகை!

— உடுவிலூர் கதிரவேல் —

தமிழ் மொழியென்றிடவே—எனக்கொரு
தாபம் பிறக்குதடி அது
அமிழ்தினை யொத்த தன்றோ—சகியே
அறியாய் நீ ஆரணங்கே

எந்தாய் நாடு ஈழமன்றோ சகியே
எதிருரைக்க யாருமுண்டோ?
இந்நாட்டில் எம்மொழியை—சகியே
இரண்டாவது ஆக்கி விட்டார்.

இன்னல் பல இழைத்தார்—சகியே
இனியும் பொறுப்பதுண்டோ?
கன்னல் மொழி தமிழை—கன்னி
காத்திட எழுவாய் பெண்ணே

உதய தாரகை உதித்தது—அங்கே
உளத்திலே களிப்பு—சகியே
நிதமுமே களிப்பு எங்கும்
நிலைத்திட வந்தது இங்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் பிரச்சினையை

# ஐ. நா. சபையின் மனித உரிமைகள் குழுவுக்கு கொண்டுவர நடவடிக்கையெடுங்கள்!



## இந்திய பிரதமரிடம் கண்ணதாசன் சமர்ப்பித்த மகஜர்!

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் தலைமையில் இயங்கும் இலங்கை அரடமி நந்து தங்கள் விடுதலையை பெற்றுக்கொள்வதற்காக போராடி வரும் இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வாறெல்லாம் உதவிபுரியலாம் என்பதை ஆராய்வதற்காக 1973ம் ஆண்டு செப்டம்பர் 10ம் நாள் சென்னையிலுள்ள கவிதா ஓட்டலில் நடைபெற்ற உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைய பின்வரும் உண்மைகளை உங்கள் மேலான கவனத்துக்கும் நடவடிக்கைக்குமாகச் சமர்ப்பிக்கிறேன்.

### இரண்டு இனங்கள்

இலங்கையில் இரண்டு இனங்கள் மட்டுமே உண்டு. சிங்களவர் பெரும்பான்மை இனமாகவும், தமிழர்கள் சிறுபான்மை இனமாகவும் வாழ்கிருர்கள். இலங்கை 1972 மே 22ல் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அன்றிலிருந்தே புதிய அரசியல் சட்டமும் அமுலுக்கு வந்தது.

இந்தப் புதிய அரசியல் சட்டத்தின்படி இலங்கையின் உத்தியோக மொழி சிங்களம். அரசாங்க மதம் பௌத்தம். நீதிமன்றமொழி சிங்களம். சிங்களப் பிள்ளைகளின் போதனமொழி சிங்களமாக இருக்கும் அதே வேளையில் தமிழ் பிள்ளைகளின் போதனமொழியைத் தெரிவுசெய்யும் உரிமை பெற்றேர்களிடம் விடப்பட்டிருக்கிறது.

அண்மையில் தேசிய அரசப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டப்படிகூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் எந்தெந்த நீதிமன்றங்களில் தமிழ் உபயோகப்படுத்தப்படவேண்டுமென்பது சிங்கள அமைச்சராலேயே தீர்மானிக்கப்படும்.

### குடியுரிமை

குடியுரிமையைப் பொறுத்தவரை அரசியல் சட்டத்தில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. தமிழ் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள்கூட அரசியல் சட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. போர்த்துக்கேயராலும், டச்சுக்காரராலும் பிரிட்டிஷ்காரராலும் கைப்பற்றப்படும்வரை - தமிழர்கள் இலங்கையை ஆண்ட பரம்பரையினர். ஆனல் இன்று அவர்கள் புதிய அரசியல் சட்டத்தின்கீழ் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிருர்கள்.

ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் குடியுரிமை பெறும் இந்தியத் தமிழர்களுக்கும், மொழியுரிமை, மத உரிமை, கல்வியுரிமை, தொழிலுரிமை, நில உரிமை அனைத்தும் மறுக்கப்பட்டிருக்கிறது அவர்கள் சந்தேகப் பிரஜைகளாக நடத்தப்படுகிருர்கள். அவர்களை அங்கிருந்து வெளியேற்றும் நோக்கத்துடன் அண்மையில் தேசியப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்களைவிட்டும் அவர்கள் அதிருப்தியடைந்திருக்கிருர்கள்.

### சிங்களப்போதனை

மலைநாட்டுப் பகுதியில் உள்ள பல பாடசாலைகளில் தமிழ்மொழிப் போதனை நிறுத்தப்பட்டு தமிழ்ப்பிள்ளைகள் சிங்கள மொழிமூலம் பௌத்தத்தையும் சிங்கள கலாச்சாரத்தையும் படிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிருர்கள். இது ஒரு இன ஒழிப்பு நடவடிக்கையுடன் ஐ. நா சபையின் உரிமைச் சாசனத்துக்கு முரணுக ஒரு பிரஜையின் உரிமைச் சாசனத்துக்கு முரணுக ஒரு பிரஜையின் அடிப்படை உரிமையைப் பறிப்பதுமாகும்.

### தமிழர்தோட்டம் பறிமுதல்

வெளிநாட்டுத் தோட்டங்களைத் தேசியமயமாக்குவதென்ற போர்வையில் இலங்கை அரசாங்கம் 35 தோட்டங்களைப்பொறுப்பேற்றது. இதில் 27 தோட்டத்தில் இலங்கைக் குடியுரிமை பெற்ற இந்தியத் தமிழர்களுக்கு சொந்தமானவை, இப்படி எடுக்கப்பட்ட தோட்டங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் முன்னுள் பாராளுமன்ற உறுப்பினர் வி. அண்ணுமலை ஆகியோரது தோட்டங்களும் அடங்கும்.

இப்படித் தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்களிலிருந்து இந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள் தொழிலின்றித் துரத்தப்படுகிருர்கள். இப்படித் துரத்தப்படுபவர்கள் தமிழ்ப் பிரதேசத்தில் குடியேறி விவசாயத்தில் ஈடுபடுவதற்கும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இலங்கை அரசாங்கம் தடைபோட்டிருக்கிறது.

### தரப்படுத்தல் அநீதி

புள்ளிகள் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அதாவது இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குள் நுழைவதற்கு சிங்கள மாணவன் 225 புள்ளிகள் எடுக்க வேண்டிய அதே வேளையில் தமிழ் மாணவன் 250 புள்ளிகள் எடுக்கவேண்டும் இத்தகைய மிலேச்சத்தனமான முறை இலங்கையின் சிங்கள வெறியர்களினுல் பின்பற்றப்படுகிறதே தவிர உலகில் வேறெங்கும் இடம் பெறவில்லை. தமிழ் மாணவர்கள் 250 புள்ளிக்கு அதிகமாக எடுத்தாலும் அவர்கள் வைத்திய பொறியியல் துறைகளில் சேர்ந்து படிப்பதற்கு இன விகிதாசார அடிப்படையை முன்வைத்து உரிமை மறுக்கப்படுகிறது.

அரசாங்க சேவைகளுக்கும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கும் தமிழர்களை தேர்ந்தெடுக்கப்படுவது மிகவும் சொற்பமாக குறைக்கப்பட்டுவிட்டது.

இலங்கை அரச தமிழ்க் [illegible]

தன் உட்பட 40க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களை கடந்த 500 நாட்களாக நீதி விசாரணையின்றிச் சிறை வைத்துள்ளது.

### கதிர்காமம்

இலங்கைத் தமிழர்களாலும இந்திய மக்களாலும் கொடுக்கப்பட்ட நன்கொடையினுல் இந்துக்களின் புண்ணிய பூமியாகிய கதிர்காமத்தில் கட்டப்பட்டிருக்கும் இராமகிருஷ்ண மிஷன் கட்டிடத்தை புனித நகராக்குவது என்ற போர்வையின் கீழ் பௌத்த பிக்குகளுக்கு கொடுக்க வேண்டுமென்று சிங்கள அரசு கட்டளையிட்டுள்ள அதே வேளையில் ராமகிருஷ்ண மிஷன் கட்டிடத்துக்கு எதிரேயுள்ள சிங்கள தர்மகர்த்தாக்களால் பௌத்த பிக்குகளின் வசதிக்காக நிர்வகிக்கப்படும் கட்டடத்தை மட்டும் அப்படியே இருக்க அனுமதித்துள்ளது.

கம்யூனிஸ்ட் சீனு பல லட்ச ரூபா செலவில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தைக் கட்டி அதைத் தனது நன்கொடையாக இலங்கை அரசாங்கத்துக்கு கொடுத்திருப்பதுடன் 1972, 72ம் ஆண்டில் எட்டரைக் கோடி ரூபாவை நன்கொடையாகவும் கொடுத்துள்ளது.

### சீனுவின் உதவிகள்

இது மட்டுமன்றி சீனு ஐந்து நவீன துப்பாக்கிப் படகுகளையும் இலங்கைக்கு கொடுத்துள்ளது. இப்படகுகளை இலங்கையின் வடகரையில் சீன உளவு அதிகாரிகளே இயக்குகின்றுர்கள். இந்த விஷயம் மிகவும் நுணுக்கமான பரிசீலனைக்குரியது.

இலங்கையை முன்னர் ஆண்ட பரம்பரையினராகிய இலங்கைத் தமிழர்கள் 1972 மே 14ம் திகதி தமிழர் கூட்டணி என்ற ஓரமைப்பை ஏற்படுத்தியிருக்கிருர்கள். இந்தக் கூட்டணியில் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலுள்ள தமிழ்க் காங்கிரஸ் கட்சி, திரு. எஸ். தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கைத்தொழிலாளர் காங்கிரசும், பேராசிரியர் சுந்தரலிங்கத்தின் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணியும் தமிழ் இளைஞர் பேரவையும் இணைந்துள்ளன. ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் சுதந்திரம் சுயகௌரவம் உரிமைகள் பறிக்கப்பட்ட நேரத்தில் இந்தக் கூட்டணி உதயமாகியுள்ளது.

### ஆறு அம்சக்கோரிக்கை

தமிழர் கூட்டணி பின்வரும் ஆறு குறைந்த பட்ச கோரிக்கைகள் புதிய அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டுமெனக்கோரியுள்ளது:

(1) அரசியல் சட்டத்தில் சிங்களத்துக்குள்ள அதே யிடம் தமிழுக்கும் தரப்படல்வேண்டும்.

(2) இந்த நாட்டைத் தாயகமாகக்கொண்ட எல்லாத் தமிழர்களினதும் பூரணகுடியுரிமைக்கு அரசியல் சட்டரீதியாக உத்தரவாதம் இருக்கவேண்டும்; பிரஜைகளுக்குள் பாகுபாடும பாரபட்சமும் நிலவக் கூடாது. ஒரு பிரஜையின் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யும் அதிகாரம் அரசுக்கு இருக்கக்கூடாது.

(3) அரசு மதசார்பற்றதாக இருக்கவேண்டும். அதே வேளையில் எல்லா மதங்களுக்கும் சமபாதுகாப்பு இருக்கவேண்டும்;

(4) அரசியல் சட்டம் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதுடன் அவற்றை நீதிமன்றம் சென்று நிலை நாட்டக்கூடிய உரிமையையும் உத்தரவாதப் படுத்தல்வேண்டும்;

(5) சாதியையும் தீண்டாமையையும் ஒழிப்பதற்கு அரசியல் சட்டத்தில் விதிகள் இடம் பெறவேண்டும்.

(6) அதிகாரம் ஓரிடத்தில் குவிந்திருக்காமல் மக்களிடம் பரவுவதற்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பு வழிகாணவேண்டும்.

ஆனல் மேற்கண்ட இக்கோரிக்கைகள் சிங்களப் பேராதிக்கம் நிறைந்த தேசிய சபையால் நிராகரிக்கப்பட்டு விட்டது.

### தன்னுட்சி முழக்கம்

சிங்களவர்களுடன் ஒரு சமரசத்தீர்வுகாண்பதற்கு எல்லாவித முயற்சிகளையும் எடுத்து தோல்வி கண்ட நிலையில் 7-9-1973ல் காங்கேசன் துறையில் நடைபெற்ற தனது வருடாந்த மகாநாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னுடைய புதிய கொள்கையாக இலங்கைத் தமிழர்களுக்கு ஓர் தன்னுட்சியை அமைத்துக்கொள்வதென்று பிரகடனப் படுத்தியிருக்கிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களுடன் மொழியால் கலாச்சாரத்தால் மதத்தால் வரலாற்றுல் தொடர்பு கொண்டுள்ள இந்தியத் தமிழர்களாகிய நாங்கள் இலங்கைத் தமிழர்களின் அவல நிலையை ஐ. நா. சபையின் மனித உரிமைகள் குழுவுக்கு கொண்டு வருவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேம்.

இலங்கைத் தமிழர்களின் இன்றைய இன்னலைத் துடைப்பதற்கு உங்களின் உதவியையும் அனுதாபத்தையும் நாடுகிறேன்.

---

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் கவிஞர் கண்ணதாசன் அவர்களால் தயாரிக்கப்பட்ட மனுவொன்றை உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனர்த்தனம் கையளித்தது தெரிந்ததே. அந்த மனுவின் தமிழாக்கம் இங்கு இடம்பெற்றுள்ளது.

---

## 'தமிழை காத்திடுவேன்'

(வேம்பை. ம. ஸ்ரீமுருகன்)

உச்சி மலை குலைந்தாலும்
உறுதி குலையாதீர் தோழர்களே
எச்சி இலை எடுத்தாலும்
எல்லாம் தொழில் அன்ரே
தச்சு வேலை பார்த்தாலும் — தங்கம்
தரம் குறைந்து போமோ
அச்சில் வார்த்த வேல்
ஆளை மட்டுமோ வென்றிடும்.

குச்சி வீட்டில் வாழ்ந்தாலும்
குறைவேதும் உண்டோ
நச்சு தொழில் செய்யாவிட்டால்
நமக்கேன் அச்சம்
அச்சமின்றி முன் வந்து
அருந்தமிழ் காத்திட்டால்
மெச்சி உன்னை வாழ்த்திடுவேன்
மெது தமிழில் பாடிடுவோம்

ஈராயிரம் ஆண்டின் முன்னும்
ஏடாயிரம் செய்திட்டான் தமிழன்
ஓராயிரம் பகை வரினும்
ஓடுதல் அறியான் அவன்
பாராயிரம் கூறும் அவன் புகழ்
பாரிசு மாநாடு பேசும் அதை
போராயிரம் கண்டிடுவோம்
புது உலகம் சமைத்திடுவோம்.

புறநாநூறும் கண்டோம்
போரெல்லாம் வென்றேம்
திறம் ஆயிரம் கொண்டோம்
திசை எட்டும் வென்றேம்.
அறம் ஆயிரம் செய்தோம்
அறப்பால் கூறும் அதை
மறம் ஆயிரம் புரிந்தும்
மாளிகை செய்வோம் தமிழுக்கு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## ஜீ ஜீ.யின் அறிக்கை!

திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், இத்திங்கள் பத்தொன்பதாம் நாள் இந்நாட்டின் பிரதமரை தாமே வலியச் சென்று சந்தித்துப் பேசிய பின்னர், அது சம்பந்தமாக ஓர் அறிக்கையும் விடுத்திருக்கிருர்;

திரு. பொன்னம்பலத்தின் அறிக்கை, பலவிடயங்களை தமிழ் மக்களுக்குப் புட்டுக்காட்டுவதாக அமைந்திருக்கிறது;

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அவர்களது மனக்குறைகளை அகற்றிட, இன்று பாராளுமன்றப்பலமிக்கவராக விளங்கும் திருமதி பண்டாரநாயகாவினுலும், அவரது அரசாங்கத்தினுலுமே சாத்தியமாகும் என்பதை தாம் பிரதமரிடமே நேரடியாக வலியுறுத்தி விட்டுத்திரும்பியதாகத் திரு. பொன்னம்பலம் தமது அறிக்கையின் இறுதிப்பகுதியில் குறிப்பிட்டிருக்கிருர்.

இது நூற்றுக்கு நூறு உண்மையான கருத்து என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி, தமிழினத்தின் மனக்குறைகளைப் போக்குவதற்கு இந்த அரசாங்கத்தினுல் நிச்சயம் முடியும்—மனம் வைத்தால்...!

அதற்கேற்ற அதிகாரப்பலமும், ஆட்சிப்பலமும் அவர்களிடம் நிரம்ப உண்டு!

ஆனுல் தமிழினத்தின் உரிமைகளை வழங்கவேண்டும்—தமிழினத்தின் தனித்துவத்தை அங்கீகரிக்கவேண்டும் — என்கின்ற தாராள மனப்பான்மைக்குத்தான் ஆட்சியாளரிடம் கடும்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதே!

இந்தத் தாராள மனப்பான்மை மட்டும் அரசிடம் இருந்திருந்தால், புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நேரத்திலேயே, தமிழ் மக்களின் உரிமைகளையும் அதில் இடம்பெறச் செய்து, தமிழ் சமுதாயத்தின் ஆதரவை அன்றே பெற்றிருக்கலாம் —

அப்படிச் செய்திருந்தால் — இன்று அரசாங்கத்தை எதிர்த்து தமிழ் மக்கள் போர்க்கோலம் கொள்ள வேண்டிய அவசியமே எழுந்திருக்காது!

ஆனுல் இன்று கூட தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க வேண்டும்—தமிழினத்தின் தனித்துவத்தை அங்கீகரித்திடவேண்டும்—என்ற தாராள மனம் ஆட்சியாளருக்கு கிஞ்சிற்றும் ஏற்பட்டதாக நமக்குத் தெரியவில்லை!

உணவுற்பத்திப்பணு குறைந்ததும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும், தலைவர்களையும் (Elected Representatives and Accredited Leaders) சந்தித்துப்பேசத்தாம் தயாரென பிரதமர் தெரிவித்ததாக திரு. பொன்னம்பலத்தின் அறிக்கை கூறுகிறது.

திரு. பொன்னம்பலத்தின் மேற்படி கூற்றிலிருந்து ஒரு விஷயம் மட்டும் நமக்குத் தெளிவாகிறது.

'தமிழர் கூட்டணி'யை தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக அங்கீகரிக்கவோ, தமிழர் கூட்டணி என்ற சொல்லைத்தானும் உச்சரிக்கவோ பிரதமரும் அவரது அரசும் இன்னும் தயாராக வில்லையென்ற உண்மைதான் அது!

தமிழர் கூட்டணித் தலைவர்களைச் சந்திப்பேன் — தமிழர் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்துவேன்— என்று தெளிவாக, திட்டவட்டமாக கூறுமல் சுற்று மாற்றுச் சொற்பிரயோகங்களால் தமிழ் மக்களை மேலும் ஏமாற்றிட அரசு நினைக்குமானுல்—அது ஏமாறுவது நிச்சயம்!

தமிழர் கூட்டணிதான் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஏகோபித்த இயக்கம்—அதனுடன் ஓர் இணக்கத்துக்கு வந்தால் மட்டுமே, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற அடிப்படை உண்மையை அரசு அங்கீகரிக்காத வரை எந்தப் பேச்சுவார்த்தையும் பயன் அளிக்கும் என்று நாம் நம்பவில்லை!

உணவுற்பத்திப்பணு தீர்ந்ததும் — தமிழர் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தாமே முன்வந்து தமது வாயால் நேரடியாக அறிவிக்க கூட பிரதமர் தயாராக இல்லை; இப்படி அறிவிப்பதற்குக் கூட முன் வராதவர் — பின்னர் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் உரிமைகளை எப்படி வழங்கப்போகிருர்? என்ற கேள்விகளும் திரு. பொன்னம்பலத்தின் அறிக்கையிலிருந்து எழுகின்றன.

தமிழர் கூட்டணி, தமிழ் மக்களின் சார்பாக பிரதமருக்கு ஆறு அம்சக்கோரிக்கை யொன்றை 1972 ஜான் மாதம் அனுப்பி வைத்தது. பதினறு மாதங்கள் கழிந்தும், அது சம்பந்தமாக பிரதமர் எதுவித நடவடிக்கையையும் இதுவரை எடுத்ததாக இல்லை.

எனவே அரசுக்கு, உண்மையிலேயே பேச்சுவார்த்தை மூலம், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத், தீர்க்கவேண்டும் என்ற அந்தரங்க சுத்தியான ஆர்வம் இருக்குமானுல், உணவுற்பத்தி நிறைவேறு மட்டும் அதை ஒத்திப்போடவேண்டிய அவசியமில்லை; உணவுற்பத்தி இயக்கம் ஒருபக்கம் நடைபெறும் அதே வேளையில் — தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினைக்குத்; தீர்வுகாண தமிழர் கூட்டணித்தலைவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தையையும் நடத்தலாம். ஏனெனில் உணவுப்பிரச்சினையைவிட உக்கிரமானது உரிமைப் பிரச்சினை. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே உலைவைக்கக்கூடிய பிரச்சினை இது! உரிமைப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டால்தான் உற்சாகத்துடன் தமிழ் மக்கள் உணவுப்பிரச்சினையில் கவனம் செலுத்த முடியும்!

ஆனுல் — ஜீ. ஜீ.யின் அறிக்கை வெளிவந்த பின்னர், பிரதமரின் உதவியமைச்சரான திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி பத்திரிகையாளர் மாநாட்டொன்றில் 'பேச்சுவார்த்தை' என்பதற்கு தந்திருக்கும் வியாக்கியானம் வேடிக்கையானது; விதண்டாவாதம் நிறைந்தது.

"தேசிய அரசுப்பேரவைதான் தமிழ் மக்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த பொருத்தமான இடம்" — என்று தந்திரமாக பேசியிருக்கிருர் திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி!

இவற்றிலிருந்து ஒன்றே ஒன்று புரிகிறது.

தமிழர் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்பதில் அந்தரங்க [illegible]யான நோக்கம் அரசுக்கு சிறிதும் கிடையாது!

# 'இன்றைய உணவு நெருக்கடிக்கு அரசாங்கமே பொறுப்பாளி'

## கொழும்பு மாநகர மண்டபக் கூட்டத்தில் கடமை வீரர் நவம் ஆற்றிய உரை!

எதிர்க்கட்சிகள் ஆதரவில் கொழும்பு மாநகர மண்டபத்தில் 11-10-73ல் நடத்திய கூட்டத்தில் திரு. வி. என். நவரத்தினம் பா. உ. ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு;-

'இலங்கையின் சரித்திரத்திலே இப்பொழுது இருக்கும் நிலையிலும் மோசமான நிலை இதுவரையும் ஏற்படவில்லை.

இந்த நாட்டின் சர்வ அதிகாரியாக தன்னைக்கருதிக் கொள்ளும் பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக நாட்டு மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் - இப்போது இருக்கும் இந்த நெருக்கடியான நிலைமையை கட்சி வேறுபாடுகளின்றி — அரசியல் குரோதங்களை மறந்து பொது நோக்கோடு பார்க்க வேண்டுமென்று கேட்டிருக்கின்ருர்.

'கொழும்பு வடக்கு தொகுதி வாக்காளர்கள் பிரதமரின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து பரம்பரை கட்சி கருத்துக்களை மறந்து — அரசாங்கத்தின் கொடுமையான உணவு விநியோக சட்டங்களை பூரணமாக மக்கள் எதிர்க்கிருர்கள் என்று காட்டுவதற்காக - அரசாங்க கட்சி வேட்பாளருக்கு எதிராக தங்கள் வாக்குகளை போட்டிருக்கின்ருர்கள்.

இந்த அடிப்படையில்தான் இன்றைய கூட்டமும் நடக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சி பிரமுகர்களும் தமிழர் கூட்டணியை சேர்ந்த நாமும் ஒரே மேடையில் அமர்ந்திருக்கின்ேறும். இதிலிருந்து எமக்கும் ஐக்கிய தேசிய கட்சியாருக்கும் அரசியல் ரீதியில் ஒற்றுமை ஏற்பட்டிருக்கின்றதென்று எவருமே கருதப்படாது;

ஐக்கிய தேசிய கட்சியாரின் அரசியல் கொள்கையை நாம் ஏற்கின்றவர்களல்லர். எமது அடிப்படை கொள்கைகளை — விசேடமாக கூட்டணியின் முக்கிய பங்காளியாகிய இலங்கை தமிழரசுக் கட்சி சென்ற மகாநாட்டில் தீட்டிய அரசியல் தீர்மானத்தை ஐக்கிய தேசிய கட்சி அங்கீகரிக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.—

இதே மேடையில் அமர்ந்திருக்கும் முதிர்ந்த அரசியல் தலைவர் கலாநிதி டபிள்யூ. தகநாயக்கா மிகவும் உற்சாகத்துடன் ஈடுபடுகின்ற அபராதுவ பா. உ. பிறின்ஸ் குணசேகர—ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் அல்ல—எங்கள அரசியல் கொள்கைகளையும் ஏற்பவர்கள் அல்ல.

எங்களைப் பொறுத்தளவில்—இந்த மேடையில் இருப்பவர்களுக்காக — எங்கள் அரசியல் கொள்கைகளை — எமது குறிக்கோள்களை நாம் எந்தக் கட்டத்திலும் மாற்றியமைக்க மாட்டோம்.

இருந்த போதிலும்—இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை மக்களும் இப்பொழுது அமுலில் இருக்கும் கொடூரமான உணவு விநியோகத் திட்டத்தை —பரிபூரணமாக எதிர்க்கின்ருர்கள் என்று காட்டும் நோக்கத்துடன் இந்தக் கண்டனக் கூட்டத்தில் ஒரே மேடையில் அமர்ந்திருக்கின்ேறும்.

இப்பொழுது எமது நாட்டில் இருக்கும் உணவு நெருக்கடி — தவிர்க்க முடியாத காரணங்களினுல் ஏற்பட்டிருந்தால் — இந்த நிலையை தவிர்ப்பதற்கு அரசாங்கம் தன்னுல் இயன்றளவு முயற்சி எடுத்திருந்தால் — இந்தக் கண்டனக் கூட்டத்தில் நாம் பங்கு பற்றியிருக்க மாட்டோம்—ஆனுல் இன்று இந்த நாட்டு மக்கள் உணவின்றி வாடுவதற்கு அரசாங்கமே பொறுப்பாளி.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை மிகவும் வன்மையாக கண்டிக்கும் நாம்—இந்த நாட்டின் உணவு உற்பத்திக்கு முட்டுக்கட்டையாக இருப்போம் என்று எவரும் கருதப்படாது.

அரசாங்கம் உணவு உற்பத்தியை வானெலி மூலமும் பத்திரிகை அறிக்கைமூலமும் ஏற்படுத்தலாம் என்று கருதுகின்றது; உணவு உற்பத்தியின் பெயரில் அரசியல் குரோதங்களை இன்னும் வளர்த்து—அரசியல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வருகின்றது—

எங்களைப் பொறுத்தளவில் அரசாங்கம் உணவு உற்பத்திக்கு உதவியும் ஊக்கமும் கொடுத்தாலென்ன — மாவட்ட நிர்வாகத்தில் இன்னும் ஊழல்களை வளர்த்து உணவு உற்பத்திக்கு முட்டுக்கட்டை போட்டாலென்ன நாம் எமது பிரதேசம் உணவில் தன்னிறைவு காண்பதற்கு ஏற்கனவே போட்ட திட்டத்தின்படி எமது சக்தி முழுவதையும் பாவிப்போம்;

# ஈழத் தமிழர்களின் இலட்சியம் வெல்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்த இனம், தமிழ் இனம்.

'கடல் கடந்தான்; கடாரம் கொண்டான்' என்னும் கீர்த்திமிக்க வரலாற்றைக் கொண்ட நேர்த்தி மிக்க இனம் தமிழ் இனம்.

ஈழம் சென்ருன்; எதிர்த்தவரை வென்ருன்; எத்தனையோ பேரைச் சிறைப்பிடித்தான்: முத்தனைய சரிதம் தனைப் படைத்தான்' என்னும் புகழுக்குரிய நிலையில் புவிபோற்ற வாழ்ந்த இனம் தான், நம் தமிழ் இனம்! இரத்தத்தை வேர்வையாக்கி இதயத்தை உழைப்பாக்கி ஈழத்தையே பொன் கொழிக்கும் பூமியாக்கி, பூரித்த இனம் நம் தமிழ் இனம்!

அன்று, மலைத்தோட்டங்களிலெல்லாம் மாடாக உழைத்த இனம் — இன்று, ஓடாக ஒடுங்கி, சிங்கள ஓநாய்களுக்கு நடுங்கி— அடங்கி வாழவேண்டுமாம்! விந்தையினும் விந்தை! கேட்டால் நம் சிந்தை; அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கின்றது!

சென்ற ஆண்டுதான் 'புது அரசியல் சாசனம்' ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளது: திருமதி. பண்டாரநாயகா அரசினரால்! அதன் மூலம் 'ஸ்ரீ லங்கா' தோன்றியுள்ளது பாழும் 'ஸ்ரீ' என்று தோன்றியதோ அன்றே தமிழரின் உரிமைக் குரல் வளையை நெரிக்கும் முயற்சியும் தொடங்கிவிட்டது.

'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்று பண்பாடி மகிழ்ந்தோம்!

'பாலம்' இருக்கிறது! அந்தோ தமிழரின் 'ஓலமும்' கேட்கிறது!

'ஆலம்' விழுது போல் அவனி முழுதும் பரந்து கிடக்கும் 'மூல' இனமே! உனக்கா இந்தக் கதி? என்னும் அவல விஞ நம்மை வாட்டி வதைக்கிறது.

இந்தியெனும் ஒற்றை ஆட்சி மொழித் திட்டத்தை எதிர்த்து உரிமை முழக்கம் செய்து வருபவன் 'இந்தியத்' தமிழன்!

'சிங்களம்' எனும் ஒற்றை ஆட்சி மொழியை எதிர்க்க உரிமைக் குரல் கொடுப்பவன், 'ஈழத்' தமிழன்.

தமிழா எங்கும் சிறுபான்மையினனுகச் சித்திரவதைப் படவேண்டியதுதான் உன் தலை எழுத்தா?

காந்தி பிறந்த நாள் அன்று இலங்கையில் வாழ் தமிழர் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் திட்டமிட்டபடி சட்ட மறுப்பு அறப்போர் முழு வெற்றிபெற்றுள்ளது. அது வே நமக்கு முழுத்திருப்தியையும் அளிக்கிறது.

முன்பு தமிழர்களுக்குள் பல்வேறு நிலைமைகள்! சிங்களவர்களின் 'பிரித்தாளும்' சூழ்ச்சிக்குப் பலியாகிக் கிடந்த தமிழர்கள் கூட, இன்று 'விழித்துக்' கொண்டுள்ளனர்.

தமிழர் அனைவரும் 'ஓரணி'யில் திரண்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களின் இதயநாயகர்—செந்தமிழ் இனங்காக்கச் சிறிக் கிளம்பியுள்ள சிங்கம், சிங்களவர்களுக்குச் சிம்மசொர்ப்பனமாகத் திகழும் தமிழர் தலைவர் செல்வநாயகம், தமிழ் இனத்தவரை ஒற்றுமைப் படுத்துவதில் முழு வெற்றி பெற்றுள்ளார்.

துணிவான தமிழர் தம் அந்நடவடிக்கையினைக் கண்டு, துணுக்குறுகிறது, சிங்கள அரசு!

தமிழர் நலன்பேண தமிழ் மொழியின் நிலைகாக்க—திட்டமொன்றை வகுத்து, தீரமுடன் செயல்பட்டு வருகிறது, ஒருங்கிணைந்த தமிழர் கட்சி!

வாக்குரிமையுள்ள தமிழர்களைக்கூட, இரண்டாந்தரக் குடிமக்களாக மாற்றும் புது அரசியல் சட்டம் தேவையில்லை;

சிங்களத்திற்கு இணையாகத் தமிழ் மொழியை மதிக்கத் தவறிய புது அரசியல் சட்டத்தை நாங்கள் மதிக்க மாட்டோம்; அதை மாற்றும் வரை போராடுவோம், என்ற உள்ள உறுதியோடு போராடும் 'ஈழத் தமிழர்களின் இலட்சியம் வெல்க!' என வாழ்த்துவோம்!

ஈழத் தமிழ் இனமே! உன் இலட்சியம் வெற்றி பெற்றே தீரும்! அதை அலட்சியம் செய்பவர் யாராக இருந்தாலும், காலத்தின் கட்டாயத்திற்கும் பதில் சொல்லியே தீரவேண்டும்'

இன்றைய உணவு நெருக்கடி என்ற ஆற்றைக்கடக்கும் வரைதான் ஆண்டவனை [illegible] உறவு; ஆறு கடந்த பின் [illegible] என்பதுதான் அரசின் நோக்கம் என்பதும் தெளிவாக புரிகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு, மூதூர், திருக்கோணமலை, மலையகத்தில், நடைபெற்ற உண்ணாவிரதங்கள்!

தமிழ் இளைஞர் பேரவையினர் திட்டமிட்டபடி, மட்டக்களப்பு, திருக்கோணமலை, மாவட்டங்களிலும், மலையகத்திலும் நடத்தி முடித்த உண்ணாவிரத இயக்கத்தின் விபரங்கள் வருமாறு:-

**29வது நாள் உண்ணாவிரதப் போராட்டம்**

தமிழ் இளைஞர் பேரவையின் 29வது நாள் உண்ணாவிரதப்போராட்டம் கல்முனை அம்பலத்தடி பிள்ளையார் கோவிலடியில் 9-10-73 மாலை 6மணிக்கு ஆரம்பமாகி, 10-10-73 மாலை 6மணிக்கு கருத்தரங்கு, தேசிய கீதம் இவற்றுடன் முடிவடைந்தது. ஏராளமான, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பங்கேற்ற இந்த உண்ணாவிரதத்தை தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

**30, 31வது நாள் போராட்டம்**

30வது நாள் உண்ணாவிரதப்போராட்டமும் 31ம் நாள் உண்ணாவிரதமும் 10-10-73 மாலை 6மணி முதல் 12-10-73 மாலை 6மணி வரை இரு நாட்கள் நிந்தாவூர்த் தொகுதியில் இரு இடங்களில்தொடர்ந்து நடைபெற்றன.

பொத்துவில் வீதியிலுள்ள அக்கரைப்பற்று மாணிக்கப் பிள்ளையார் கோவில் முன்றலில் உண்ணாவிரதமிருக்க ஏற்பாடு செய்யப்பட்ட சமயத்தில், அக்கோவிலுக்கு எதிரேயிருந்த ஒருபௌத்த ஆலயத்தின் பிக்கு, உண்ணாவிரதத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தாராம்— தமிழ் ஈழத்தில் வந்து குடியேறியவர்கள்— பிள்ளையார்கோவிலில் இன்று உண்ணாவிரதமிருப்பதற்கு எதிர்க்கிறார்கள்— நாளை பிள்ளையார் கோவிலே இருக்கக்கூடாது என்பார்கள் —இதற்கெல்லாம் நாம் விட்டுக்கொடுப்பதா? என்று தமிழ் இளைஞர்கள் கொதித்தெழுந்தபோதிலும் — பின்னர் வேறொரிடத்தில் உண்ணாவிரதம் நடைபெற்றது.

**32வது நாள் உண்ணாவிரதம்**

32வது நாள் உண்ணாவிரதம், 12-10-73 மாலை 6மணிவரை தம்பிலுவில் 2ம் பிரிவில் திரு. சோமசுந்தரத்தின் இல்லத்தில் நடைபெற்றது. ஏராளமான மக்கள் ஆர்வம் பொங்கக் கலந்துகொண்டனர். அமரர் அரியநாயகத்தின் சொந்த ஊர் அல்லவா தம்பிலுவில்? தமிழுணர்ச்சிக்குக் கேட்கவேண்டுமா?

**33வது நாள் உண்ணாவிரதம்**

33வது நாள் உண்ணாவிரதம் கல்குடாத்தொகுதியில் வந்தாறு மூலை விநாயகர் ஆலய முன்றலில் 13-10-73 மாலை 6 மணிக்கு கருத்தரங்குடன் ஆரம்பமாகி 14-10-73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த உண்ணாவிரதத்தில், வி. தர்மலிங்கம் பா. உ. மு. மாணிக்கம், ஏறாவூர் தெற்கு இ. ச. தலைவர் சி. ஆலால சுந்தரம், கு. கோவிந்தசாமி திரு. வரதராஜா, திரு. பொ. மாணிக்கவாசகம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

**34வது நாள் உண்ணாவிரதம்**

34வது நாள் உண்ணாவிரதமும் கல்குடாத்தொகுதியிலுள்ள கிரான் விநாயகர் ஆலய முன்றலில் 14-10-73 மாலை ஆரம்பமாகி 15-10-73 மாலை 6மணிக்கு முடிவடைந்தது. திரு. தேவநாயகம் பா. உ. உண்ணாவிரதத்தை தொடக்கி வைத்தார். உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம், பொ. மாணிக்கவாசகம் சி. ஆலாலசுந்தரம் உட்பட பலர் இங்கு உரையாற்றினர். ஏராளமான மக்கள் கருத்தரங்கில் பிரசன்னமாயிருந்தனர்.

**மலையகத்தில் ஆரம்பம்**

53வது நாள் உண்ணாவிரதம், மலையகத்தில் அட்டன் ஸ்ரீ கதிரேசன் கோவில் முன்றலில் 15-10-73 நாள் நடைபெற்றது. இந்த உண்ணாவிரதத்தை இ. தொ. கழக துணைப்பொதுச் செயலாளர் திரு. சு. கெங்கரத்தினம் தொடங்கிவைத்தார்.

**36வது நாள் உண்ணாவிரதம்**

36வது நாள் உண்ணாவிரதம், மலையகத்தில் பொகவந்தலாவை தெண்டாயுதபாணி ஆலய முன்றலில் நடைபெற்றது.

உண்ணாவிரதத்தை இ. தொ. கழக பிரமுகர் திரு. கெங்கரட்னம் ஆரம்பித்து வைத்தார். அங்கு திரு. கெங்கரட்னம் திரு. சி. புஷ்பராசா, திரு. எலக்சாண்டர் திரு. சண்முகநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

அங்கு நடந்த உண்ணாவிரதத்தின்போது பொலிசார் அங்கு வந்து உண்ணாவிரதம் இருப்பது சம்பந்தமாக விசாரணை செய்தனர். தமிழ் இளைஞர் பேரவை இயக்குனர்களில் ஒருவரான திரு. சி. புஷ்பராசா அதற்கான காரணங்களை விளக்கினர்.

விசாரணையின் போது பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிங்களத்தில் விசாரணையை துவக்கினர் அதற்கு பதிலளிக்க மறுத்துவிட்டார் புஸ்பராசா. பிறகு ஆங்கிலத்தில் விசாரணையை துவக்கினர் அதற்கும் புஸ்பராசா மறுத்துவிட்டார்.

அதன் பிறகு நன்கு தமிழ் தெரிந்த சிங்களவரை இன்ஸ்பெக்டர் அழைத்து அதன் பிறகே விசாரணையை நடத்தினர்.

உண்ணாவிரதம் இருந்தோர்களின் பெயர்களையும் பொலிசார் பதிவு செய்தனர். உண்ணாவிரதம் அமைதியாக நடைபெற்றது.

உண்ணாவிரத முடிவில் தமிழுக்காக உயிர் நீத்த வீரர்கள் அய்யாவு — பிரான்சிஸ் ஆகியவர்களின் சமாதிக்கு திரு. கெங்கரட்னம், திரு. எலக்சாண்டர். தமிழ் மன்ற செயலாளரும் தொ. தே. சங்க மாவட்ட இளைஞர் இயக்க தலைவரும் ஆன திரு. க. செல்லையா திரு. பத்மநாதன் ஆகியோர்களுடன் சென்று சி. புஸ்பராசா மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

**37வது நாள் உண்ணாவிரதம்**

37வது நாள் உண்ணாவிரதம் மீண்டும் 17-10-73ல் அட்டனிலேயே நடைபெற்பெற்றது 25க்குமேற் பட்ட இளைஞர்கள் இதில் பங்கேற்றனர்.

**38வது நாள் உண்ணாவிரதம்**

38வது நாள் உண்ணாவிரதம், 17-10-73 மாலை 6மணிக்கு மூதூர் நவரெண்டம் மண்டபத்தில் ஆரம்பமாகி, 18-10-73 மாலை 6மணிக்கு முடிவடைந்தது. உண்ணாவிரதத்தை மூதூர் பா. உ. திரு. தங்கத்துரை ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்தியதுடன், தாமும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார். 150 இளைஞர்கள் இந்த உண்ணா விரதத்தில் பங்கேற்றனர்.

**39வது நாள் உண்ணாவிரதம்**

தமிழ் இளைஞர் பேரவையின் 39வது நாள் உண்ணாவிரதமும், மூதூர் தொகுதியிலுள்ள கிளிவெட்டியில் அம்மன் ஆலய முன்றலில் 18-10-73மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 19-10-73 மாலை 6மணிக்கு முடிவடைந்தது. ஒரு பெண்மணி உட்பட 150இளைஞர்கள் கலந்து கொண்ட இந்த உண்ணாவிரதத்தில் திரு. ஜேச். டீ. வாசும் கலந்துகொண்டார்.

**40வது நாள் உண்ணாவிரதம்**

40வது நாள் உண்ணாவிரதம் 10-10-73 மாலை 6 மணிக்கு திருக்கோணமலைத் தொகுதியிலுள்ள நிலாவெளி பிள்ளையார் கோவில் முன்றலில் ஆரம்பமாகி 20-10-73 மாலை 6மணிக்கு முடிவடைந்தது. நிலாவெளி கி. மு. சங்கத் தலைவர் திரு. க. பரராசசிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த உண்ணா விரதத்தில் 40 இளைஞர்கள் பங்கேற்றனர்.

**41வது நாள் உண்ணாவிரதம்**

41வது நாள் உண்ணாவிரதம் திருக்கோணமலை ஆலடிப்பிள்ளையார் ஆலய முன்றலில் 20-10-73 மாலை 6மணிக்கு ஆரம்பமாகி, 21-10-73மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. திரு. க. தவராசாவினால் தொடக்கி வைக்கப்பட்ட இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு திருமலை பா. உ. திரு. நேமிநாதனும் உரையாற்றினார். இந்த உண்ணாவிரதத்தில் பத்து வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட 53 இளைஞர்களும், 70 வயது மூதாட்டி ஒருவர் உட்பட பத்துப்பெண்களுமாக மொத்தம் 63பேர் கலந்து கொண்டனர்.

## ஜெயக்கொடி...

(1-ம் பக்கம் பார்க்கவும்)

விடுத்தவேண்டுகோளை அரசாங்கத்தரப்பில் அமைச்சர் கே. பி. இரத்நாயகா ஏற்றுக்கொண்டார்.

இதற்கு ஏற்றவகையில் மசோதா திருத்தியமைக்கப்படுமென அவர் உறுதியளித்தார்.

எந்தமொழியில் ஒருவர் வாக்குமூலம் அளிக்கிறாரோ அதே மொழியிலேயே அவரது வாக்குமூலத்தைப் பதிவதற்கு தெளிவான சட்டம் வேண்டும் என வற்புறுத்திய திரு. ஜெயக்கொடி, இப்போதைய சட்டத்தில் அது தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற அரசுதரப்பு வாதத்தை நிராகரித்தார்.

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறீர்களா என்பதை அறிவிக்குமாறும், அப்படிப் பிறப்பித்திருந்தால் அந்த உத்தரவின் பிரதி ஒன்றை எனக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

'கடிதம் கிடைத்தது' எனும் உங்கள் வழக்கமான பதிலை அனுப்பாமல் இக்கடிதத்திற்குரிய பதிலை உடனே அனுப்பி உதவுக;

இதற்குப்பிரதமரிடமிருந்து 20.10.73ல் பண்டிதர் இரத்தினத்துக்கு தமிழில் அனுப்பப்பட்ட பதில் வருமாறு:

தங்களால் 1973 செப்தெம்பர் 25ந் திகதி எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக இதனை எழுதுகிறேன். 1973செப்தெம்பர் 23ந் திகதி சிந்தாமணி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தியில் கூறியுள்ளது போன்று என்னால் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்பதைத் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.'

## இந்திய அரசே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

—இவ்வாறு அண்மையில் நடைபெற்றசென்னை தியாகராசர் கலைக்கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம்ஒன்று நிறைவேற்றப் பட்டுள்ளது?

## மகாகவி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அதே வேளையில் மக்கள் இலக்கியமும் படைக்கக்கூடிய எழுத்தாளர்கள், கவிஞர்கள் அவரது வாரிசுகளாக நம்மிடையே தோன்ற வேண்டும். அவரது திறமையின் முழுமையை இந்நூல் வாயிலாக அறியமுடியாவிடினும் அவர் ஆற்றிய இலக்கியப்பணியில் இந்நூல் ஒரு 'மைல்கல்' என்றே பெருமையுடன் குறிப்பிடவேண்டும்.

அடுத்து திரு. கி. க. சண்முகநாதன் (சண்) உரையாற்றுகையில், எழுத்தாளன் என்பவன் தனது சக்தி முழுவதையுமே சமுதாயத்திற்கு அர்ப்பணித்துவிடுகின்றான். தன்னை அழித்துக்கொண்டு சமுதாயத்திற்கு ஒளியை ஊட்டுகின்றான். ஆனால் சமுதாயம் அதனை எந்தளவுக்குச் சிந்தித்துப்பார்க்கின்றது. வண்ணியூர்க் கவிராயரைப் போன்று எத்தனையோ சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் தங்கள் படைப்புக்களையெல்லாம் நூலுருக் கொடுக்கமுடியாமல் கஷ்டமுறும் நிலைமினைக் காண்கின்றோம். இந்நிலை மாற வழி என்ன? எழுத்தாளர்களைப் பாராட்டுவதோடு மாத்திரம் நின்றுவிடாது அவர்களது படைப்புக்களை ஒவ்வொருவரும் வாங்கி ஆதரிக்கவேண்டும்.

அடுத்து — நூலாசிரியர் நன்றி தெரிவித்து உரையாற்றுகையில், எனது கன்னிப்படைப்பு கவிதைத் தொகுப்பாக இன்றி சிறுகதைத் தொகுப்பாக ஏன் விடுகின்றதென்று இலக்கியவாதிகள் பலரும் கேட்கின்றார்கள். மக்கள் மத்தியில் கவிஞனாகத்தான் நன்கு அறிமுகமாகியுள்ளேனென்பது உண்மை. அதற்காகக் கவிதைத் தொகுப்புத்தான் வெளியிடவேண்டுமென்ற நியதி இல்லை. அப்படி வெளியிடுவது 'ஒரு கவிஞன்' என்பதை நிலைநாட்டும் செயலாக முடியுமேயன்றி அதனால் மக்கள் அதிகப் பயன்பெறமுடியாது. காரணம்? கவிதையை விளங்கிக்கொள்பவர்களும் இரசிப்பவர்களும் மிகக் குறைவு, சிறுகதைகளை வாசிப்பவர்களும் விளங்கிக்கொள்பவர்களும் இன்று ஏராளமாகவிருக்கின்றார்கள். காலமாற்றத்திற்கேற்ப பெரும்பாலான மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய விரும்பிப் படிக்கக்கூடிய இலக்கிய வடிவமாகிய சிறுகதைகளையே நான் முதன்முதலாகத் தொகுத்து வெளியிட முன்வந்தேன். சிறுகதைதான் மக்கள் இலக்கியம்.

மற்றும்— ஓவியர் 'புரட்சிக் கவிஞன்கே', மாதகல் செல்வா, ஐஞப் ப. நூர்தீன் உட்படப்பலர் உரையாற்றினர். கவிஞரின் பிறந்தகமான நேரியகுளம் (பெரிய நொச்சிக்குளம்) ரோ. க. பாடசாலையில் நடைபெற்ற இவ்விழாவில், சி. செட்டிகுளம், கி. ச. தலைவர் திரு. பொ. செல்வநாயகம் நூலை வெளியிட்டுவைக்க 'செங்கை ஆழியான்' முதற் பிரதியைக் பெற்றுக்கொண்டார் ஆனால், உமர் லெவ்வை... இதர கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**506-வது நாள்**

கந்தர்சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்— நெஞ்சிற் பதிப்போர்க்குச்செல்வம் பலித்துக் கதித்தோங்கும்நிஷ்டையுங்கைகூடும் நிமலரருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

கந்தர் சஷ்டி விரதத்தை முன்னிட்டு கந்தர்சஷ்டி கவசம் என்ற நூலை வெளியிட்டுள்ளோம். 15 மில்க் வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பிபெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை தேர்தலை உடனே நடத்துக!

## கட்சிபேதமின்றிக் கோருகின்றன அத்தொகுதியின் உள்ளூராட்சி மன்றங்கள்!

"காங்கேசன்துறைத் தொகுதியின் இடைத் தேர்தலை உடன் நடத்துக."

இப்படி அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருக்கிறது தெல்லிப்பழைக் கிராம சபை.

கடந்த 13-10-73ல்சபைத் தலைவர் ம. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்துடன் இதுவரை தேர்தல் நடத்தப் படாமைக்குக் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

மொத்தம் 18 உறுப்பினர்களைத் தற்போது கொண்டு இயங்கும் இச்சபையில் தலைவர் உட்படப் பதினெட்டுப் பேரும் இப்பிரேரணையை ஆதரித்திருப்பதோடு இதனைத் தீர்மானிப்பதற்கு ஒரு விசேட கூட்டத்தைக் கூட்டும்படியும் தலைவரை எழுத்துமூலம் கோரியிருந்தனர்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கீரிமலை வட்டார உறுப்பினர் பொ. கனகராசாவால் பிரேரிக்கப்பட்டு, வெ. நடராசாவால் ஆமோதிக்கப்பட்ட மேற்படி பிரேரணையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

காங்கேசன் துறைத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்துத் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் இத்தொகுதியின் இடைத்தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வராததன் மூலம் இத்தொகுதி மக்களின் ஜனநாயக பாரம்பரிய உரிமைகளுக்கு மதிப்பளிக்க மறுத்ததோடு இத்தொகுதி மக்கள் தமது சுயதேவைகளையே பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு கஷ்டமடைய இவ்வரசாங்கம் உடந்தையாக இருந்திருக்கிறது. இதனை எமது சபை வன்மையாகக் கண்டிப்பதோடு இனிமேலும் எவ்வித சாட்டுகளும் கூறாது மேற்படி தேர்தலை உடன் நடத்தும்படி எமது சபை அரசாங்கத்தை வேண்டுகிறது. அத்துடன் அரசாங்கம் கூறுவது போல இங்கு எவ்வித அமைதியின்மையும் நிலவவில்லை என்பதையும் எமது சபை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.'

தலைவர் உட்பட இச்சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஆதரவாளர்களாயிருந்தும் இப்பிரேரணையை ஆதரித்திருப்பதும், காங்கேசன்துறைத் தொகுதியின் உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்றான காங்கேசன் துறைப் பட்டின சபையும் மேற்படி தீர்மானத்தைக் கடந்த வாரம் நிறைவேற்றியிருந்ததும், இப்பகுதியின் ஏனைய ஊராட்சி மன்றங்களில் ஒன்றும் தோழர் வ. பொன்னம்பலத்தைத் தலைவராகக் கொண்ட மல்லாகம் கிராம சபையும் மயிலிட்டி கிராம சபையும் மேற்படி பிரேரணைகளைக் கொண்டு வருவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளமையும், இத்தொகுதியின் சில சனசமூக நிலையங்கள், சங்கங்கள் மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பதும் இத்தொகுதி மக்களின் அரசியல் உணர்ச்சிகளையும் எழுச்சியையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன.

காங்கேசன்துறைதொகுதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. ரி. பி. முருகையா மீது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தின் பின்னரேயேமேற்படி தீர்மானம் தெல்லிப்பழைக் கிராமசபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்பிரேரணையை ஆதரித்த உறுப்பினர்கள் பின்வருமாறு:-

திருவாளர்கள்: பொ. கனகராசா, வெ நடராசா, செ. கந்தசாமி, சி. கதிரிப்பிள்ளை, ந. சி. நாகலிங்கம், ஆ. தில்லையம்பலம், த. செல்வரத்தினம், வ. நடேசு, ஆ. அடைக்கலமுத்து, த. மாசிலாமணி, யே. அன்ரனி லாசறஸ், யோ. இராசநாயகம், சு. பத்திநாதர், ச. தங்கவேலு, மு. சின்னத்தம்பு, சி. செல்வராசா, சி. பசுபதி, ம. சிதம்பரநாதன்.

இந்த முன்மாதிரியை இத்தொகுதியில் உள்ள ஏனைய சங்கங்கள் சனசமூக நிலையங்களும் பின்பற்றி அரசாங்கத்திடம் கோரிக்கை விடும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 'தமிழ் இளைஞர் பேரவை யாருக்கும் கட்டுப்பட்டதல்ல!

## சோம்பிக் கிடக்கும் தலைவர்களையும் சுறுசுறுப்பாக்கி இயங்க வைப்போம்!"

## திருக்கோணமலையில் பிரான்சிஸ் முழக்கம்!

'தமிழர் கூட்டணியுடன் நாங்கள் சேர்ந்தவர்களுமல்லர் — அதே வேளையில் எதிர்ப்பவர்களுமல்லர். நாம் இளைஞர்கள். சுயமாகச் சிந்தித்து நன்முடிவெடுக்கக் கூடியதிறன் எங்களிடமும் இருக்கின்றது.

செயல்படாமல் சோம்பிக் கிடக்கும் தலைவர்களை நாங்கள் சும்மா விடமாட்டோம் எமது பேரவை அவர்கட்குத் தலையிடியைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். அதே வேளையில் தமிழுக்காக நேர்மையாக உழைப்பவர்களோடு நாங்கள் பகைக்க மாட்டோம் — பகைக்கவும் கூடாது.

'அநியாயமாகச் சிறைப் பிடிக்கப்பட்டோர் அனைவரையும் விடுதலை செய்தாக வேண்டும் அல்லது அவர்களை நீதிதேவனின் முன்னே நிறுத்தவேண்டும்.

'தமிழ் மாணவர்கள் தரப் படுத்துதல் என்றபோர்வையின் கீழ் மட்டந்தட்டப்படுவதைக் கர்ணகடூரமாக நாங்கள் எதிர்க்கின்றோம். தமிழுக்காக அவர் என்ன செய்தார்? இவர் என்ன செய்தார்? அந்தக்கட்சி என்ன செய்தது. இந்தக் கட்சி என்ன செய்தது? என்று கேட்காதீர்கள். அது நம்மை நாமே பலவீனப் படுத்துவதாகும்.

'என்னினத்தின் விடுதலைக்கு நான் என்ன செய்தேன் என்று உங்களையே நீங்கள் கேளுங்கள் — உடனே செயலில் இறங்குங்கள். பகவத்கீதையில் கண்ணன் சொல்லிய அறவழியே நமது வழி. ஒரு கன்னத்திலடித்தால் மறு கன்னத்தையும் கொடுப்பது நமது பாதையல்ல.

கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம் அதனால் பாபமில்லை' என்பதே எமது அறவழி. இதை ஆட்சியாளர்கள் நன்கு உணர வேண்டும். எதற்கும் தயாராக நாம் இறங்கியுள்ளோம்.

எமது அறவழியை அரசாங்கம் தவறாக எடை போட்டு விடக்கூடாது. நம்மை நாமே எதற்காக வருத்திக்கொண்டு உண்ணாவிரதமிருக்கின்றோம். ஒவ்வொரு தமிழ்ப் பேசும் மகனும் விழிப்படைய வேண்டும்—செயல்பட எழ வேண்டும்—நமது ஈழத் தமிழகத்தைப் பெற்று அங்கே நாம் களிப்படைய வேண்டும். எனவே இளைஞர்களே தியாகம் புரிந்து வெற்றி பெற உங்களைப் பேரவை அழைக்கின்றது. நமது விடுதலைக்காக உழைக்கும் எவரும் நமது நண்பர்களே.

எமது விடிவு வெகுதூரத்திலில்லை. அகில உலகமும் எங்கள் வீர சபதத்தை அறப்போரை — உண்ணாவிரதத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது என்பதையும் உலக அனுதாபம் எங்கள் மீது விழுந்திருக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது.

இவ்வாறு 7-10-73 அன்று திருகோணமலைத் 'தமிழகத்தில்' நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவைப் பிரதிநிதி செல்வன் கிறிஸ்த்தபர் பிரான்சிஸ் முழங்கினர்.

தமிழ் இளைஞர் பேரவைக் கிளை ஒன்றும் திருக்கோணமலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

# 11 தமிழ் பேசும் மொழிவழித் தொழிற்சங்கங்களின் கூட்டுத் தீர்மானம்!

இலங்கை ஒருபோதும் எதிர்நோக்காத உணவு நெருக்கடிக்கு இன்று உட்பட்டுள்ளதை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். இந்நெருக்கடியைத தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு முழு ஆதரவையும் அளிக்க விரும்பும் நாம் இந்த ஆதரவு பொருளுடையதாகவும் பயனுடையதாகவும் அமையவேண்டுமெனில் இலங்கைவாழ்தமிழ்ப்பேசும் மக்களுடைய உரிமைகள் அனைத்திற்கும் நிலையான பாதுகாப்பளிக்கும் முறையில் இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு திருத்தியமைக்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்த விரும்புகிறோம்.

அரசாங்கம் உணவுற்பத்தியைத் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்களூடாகவே தூரிதப்படுத்த வேண்டுமென்ற முடிவுக்கமைய காங்கேசன் துறை இடைத்தேர்தலை உடனடியாக நடாத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

உணவுற்பத்தி வெற்றியளிக்க வேண்டுமென்று தமிழ் அரசாங்க ஊழியர்கள் விரும்புகின்ற போதிலும், சொந்தநிலவசதியற்றஇடங்களில் வதிவதனல் அவர்கள் தத்தம் நிலங்களில் உணவுற்பத்தியில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கும் முறையில் அவர்களை உடனடியாக அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு மாற்றும் முறையில் நாட்டின் நிருவாகத்தை கூடியளவு பன்முகப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அரசாங்க ஊழியர் விவசாயத்தில் ஈடுபடுவதற்குப் போதிய வாய்ப்பளிக்கும் முறையில் வேலை நாட்களை வாரத்திற்கு ஐந்து நாட்களாக்குவதற்கு உடனடியாக ஏற்ற சட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு இன்று கூடியுள்ள (அ) வில் குறித்துரைத்த தமிழ் மொழிவழித் தொழிற் சங்கங்கள் தம் முழு ஆதரவையும் அளிப்பதோடு, ஈழம் வாழ் தமிழ்ப்பேசும் மக்களும் இம்மகாநாடு முழு வெற்றிபெற நிதியுதவியும் மற்றும் இன்னோரன்ன உதவிகளையும் உள்ள நிறைவோடு வழங்குமாறும் வேண்டுகிறோம்.

# "மகாகவி பாரதியின் வழித்தோன்றலே வன்னியூர்க் கவிராயர்"

—செங்கை ஆழியான்

'இலக்கிய உலகில் எந்த ஒரு எழுத்தாளனும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதோடு நின்று விடாது அதைக் களைந்தெறிவதற்கு மாற்று மருந்தையும் காட்ட வேண்டும். சமுதாயத்தைப் பீடித்திருக்கும் நோயைக் குணப்படுத்தவே எழுத்தாளன் என்ற வைத்தியன் உழைக்க வேண்டும். வன்னியூர்க் கவிராயரைப் பொறுத்தமட்டில், எந்தவொரு கோஷ்டிகளின் கையிலும் சிக்கிக்கொள்ளாது சுதந்திரமாக நடு நிலையில் நின்று இலக்கியப் பணிபுரிந்ததன் மூலம், ஈழத்து இலக்கியத் துறையில் தனக்கெனவொரு தனியிடத்தைப் பெற்றுக் கொண்டவராகும். அவரது முதல் படைப்பு கவிதைத் தொகுதியாக இல்லாது சிறுகதைத் தொகுப்பாக வருவதையிட்டு தான் பெருமிதமடைகின்றேன். இவ்வாறு பிரபல எழுத்தாளரு செட்டிகுளம் காரியாதிகாரியுமாகிய திரு. செங்கை ஆழியன் அவர்கள், 'ஈழத்துக் காவிய தீபகம்' வெளியீட்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், ஒரு சமுதாயத்தில் வர்க்கபேதம், சாதிபேதம், போன்ற பல வேறு பட்ட பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. அவற்றையெல்லாம் பகைப் புலத்தை உருவாக்கும் எழுத்துக்கள் மூலம் களைந்துவிட முடியுமா? குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்ற விதத்தில்தான் அதற்குத் தீர்வு காணக் கூடிய மார்க்கம் ஏற்படமுடியும். இன்று எம்மிடையே நடமாடிக்கொண்டிருக்கும் கதாபாத்திரங்களையெல்லாம் அவரது கதைகளில் நன்கு காணக் கூடியதாயிருக்கின்றது. வன்னியூர்க்கவிராயர் புலமை விளையாட்டுக்களையும் புரிந்து வருபவரென்பது நாடறிந்த விடயம். மிகவும் கஷ்டமான சித்திரகவிப்பாவினங்களான நாகபந்தம், சக்கரபந்தம், தேர்ப்பந்தம், போன்ற கவிகளை ஆக்கி ஈழத்தின் பெருமையையுலகறியச் செய்தவர். முன்பு சுதந்திரன் ஆசிரியர் குறிப்பிட்டது போல ஆயிரத்திலொரு கவிஞருக்குத்தான் அத்தகைய திறமை கைவரப்பெறும். சுதந்திரக்கவிஞர் மகாகவி பாரதியாரின் வழித்தோன்றலாகத் தோன்றியவரே வன்னியூர்க் கவிராயர். [illegible] விளையாட்டுக்களையும்

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களும் தமிழ் மொழியும்

கே. எஸ். ஏ. கபூர்

ஒன்பதாம் நூற்றாண்டு அது. வரலாற்றில் புகழ் கண்ட பூமி—உலக நாகரீகங்களுக்குத் தனி வழிகாட்டிய பண்டைய நாடுகளில் ஒன்று-ஆட்சிக் கலைகண்ட பல மாமன்னர்களை அலைஅலையாகப்பெற்ற நன்னிலம்—அதுதான் எழில் கொண்ட எகிப்து. இந்த ஒன்பதாம் நூற்றாண்டில் 'ஹாரூன் வாதிக்' என்ற அரக்கனின் பிடிக்குள்ளாகி அதன் பண்டையப் பெரும் புகழிழந்து-பொலிவிழந்து வேகமாக அழிந்தொழிந்துகொண்டிருந்தது.

எகிப்திய சரித்திரமே என்றும சந்தித்திருக்கமுடியாத அளவு இவனது ஆட்சியிலே பஞ்சம்-பசி-பட்டினி வேலையில்லாத்திண்டாட்டம்-அடக்குமுறை - ஆணவமான போக்கு. மொத்தத்தில் இவனது ஆட்சியில் மக்கள் செத்தொழிந்துகொண்டிருந்தனர்— எனவேதான் — இவனது ஆட்சியின்கீழ் இனிமேலும் நாம் வாழ்ந்தால் மாண்டொழிவது மட்டுமே நிச்சயம் என்ற நிலையிலேயே கி. பி. 875ம்—ஆண்டளவில் பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 224'' எகிப்திய முஸ்லிம்கள் அகதிகளாக அடைக்கலம் தேடி - கடல் கடந்து—பாண்டியப் பெருநிலமான'' காயல்நகரில் வந்திறங்கினார்கள்.

அப்போது கருணையே உருவான பாண்டிய மாமன்னனும் அடைக்கலம் தேடிய அந்த அராபிய முஸ்லிம்களை ஈகைக்குணத்தோடு கரம் கூப்பி வரவேற்று — அவர்களுக்கு ஆறுதல்கூறி தேவையான அத்தனை வசதிகளையும் செய்துகொடுத்து — அவர்கள் காலடி வைத்த இக் காயல்நகரையும் அவர்களுக்கே தானம் செய்துவிட்டான். தமிழகத்தின் பெருங்குணத்தில் நம்பிக்கை கொண்டுவிட்டான். தமிழகத்தின் பெருங்குணத்தில் நம்பிக்கைகொண்டு உயிரைப்பணயம் வைத்து—அடைக்கலம் — தேடி அலைஅலையாக ஓடிவந்தவர்களை எல்லாம் கைகொடுத்து வரவேற்று—வாழவைத்துத் தனி இன்பம் கண்ட தமிழினம், இவர்களது தஞ்சம் என்ற சொல்லுக்கும் தலைவணங்கி வாழ வழிகாட்டியது மட்டும் நமக்கு ஆச்சரியத்துக்குரியதல்லவே!

தமிழகத்தில் அடைக்கலம் தேடிய முஸ்லிம்களை இன்றைய சிங்கள ஆட்சியாளர்களைப் போன்று அப்பாண்டிய பெருநில மன்னன் அந்த அகதிகளைப் பார்த்துக் 'கள்ளத்தோணி' என்ற கோஷத்தை எழுப்பவில்லை — துப்பாக்கியைக்காட்டித் துரைத்தனம் நடத்தவில்லை—எனது பாண்டிய மண்டலத்திற்குள் அராபிய மொழியோ—இனமோ—இஸ்லாமிய மதமோ காலடிவைக்கக்கூடாது—தப்பினேன், பிழைத்தேன்என்று வந்த வழியே ஓடிப்போங்கள் என்று கூறவில்லை — அல்லது தனிச்சட்டங்கள் வகுத்து வதைசெய்து சாகடிக்கவில்லை. மாறாக—தமிழுக்கே உரித்தான பண்போடும்—செயலோடும் விருந்தோம்பி வரவேற்ற நிகழ்ச்சிகளையே சக்திகொண்ட சரித்திரத்தின் வரிகளிலே வரிசை வரிசையாக உணர்ச்சியோடு நாம் படிக்கின்றோம்.

பண்டையப் பெருநிலத்தின் பெருமைக்குரிய வரலாற்றில் காயல்நகர் என்ற பெரும்பகுதியைப் பெற்று இலட்சிய அமைப்போடு வாழத் தொடங்கிய அவர்களின், அவ்வப்போது தேவையான அத்தனை வசதிகளையுமே வாரிவழங்கிக் கொண்டிருந்ததில் மன்னனும்—மக்களும் சளைக்கவே இல்லை. அரசியல்—நீதி-வணிகம்—சமூகஅமைப்புபோன்ற பல்வேறு துறைகளிலும் தன்னிச்சையாகச் செயல்பட்டு வாழத் தனி உரிமைகள்கூட இவர்களுக்குப் பூரணமாக வழங்கப்பட்டிருந்தன. தமக்குத் தேவையான சட்டதிட்டங்களைத் தாமே இயற்றிச் செயல்படுத்திக்கொள்ளக்கூடிய மிகப் பெரிய அந்தஸ்தும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

### ஆட்சிக்கு அச்சாணியாகினர் முஸ்லிம்கள்

வந்தேறு குடிகளான இம் முஸ்லிம்கள் பாண்டிய மாமன்னனின் பெருங்குணத்தையும்-தமிழ் மக்களின் தயாள மனதையும் கண்டு தம்மையே மறந்துவிட்ட நிலையில் தங்களைப் பாண்டிய பெருநிலத்தின் மக்களாகவே—இஸ்லாத்திற்கு மாறுபடாத நிலையில் உணர்ச்சியோடு மாற்றிக்கொண்டார்கள்.

தங்களைப் பெருங்குணத்தோடு வாழவைத்துப் புகழீட்டித்தந்தவர்களுக்குத் துரோகம் செய்பவர்களல்லவே முஸ்லிம் மக்கள்! காலம் செல்லச்செல்ல இம் முஸ்லிம்கள் வெட்டிப்பிரிக்க முடியாதவர்களாக பாண்டிய நாட்டு மக்களுடன் ஒன்றித்துப் பிணைந்து விட்டார்கள். அப்போது — அப்பாண்டிய மன்னரும் மக்களும் அம்முஸ்லிம்களின் தேசபக்தி —செயல் திறன் — புத்தி சாதுர்யம் ஆகியவைகளைக் கண்டு—பிரமித்து—தம் ஆட்சியின் அச்சாணியாகவே அவர்களில் பலரை அரச சபையில் மனமகிழ்ச்சியோடு அமர்த்திக் கொண்டார்கள்.

முகமதுகல்ஜி என்பவரை தன் நாட்டின் தேசாதிபதியாகவும், கமால்தீன் என்பவரை கடற்படைத்தளபதியாகவும், [illegible] என்ற கல்விமானை [illegible] மன்ற நீதிபதியாகவும், சுபைர் என்ற மாபெரும் வீரனை காலாட் படைத் தளபதியாகவும் நியமித்துக் கொண்ட பாண்டிய மன்னனின் பெருமைக்குரிய குணத்தை-அறிவுத்திறனைப் புகழ்வதென்றால் ஆண்டுக்கணக்காக அதைச் செய்துகொண்டே இருக்கலாம். பாண்டியப்பெரும் வேந்தனது விவேகமான இச் செயல் திறன்களையும்— முஸ்லிம்கள் வாழ்வளிக்கப் பட்டு கௌரவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளையும் வரலாறுகள் அழிந்தாலும்கூட எம்மால் மறக்க முடியுமா?

### இலங்கையிலும் முஸ்லிம்கள் குடியேறினர்

இப்பாண்டியப் பெரும் பேரரசில் சிறந்த வாழ்வு கண்ட இம் முஸ்லிம்களில் பலர் வர்த்தகத்திற்காக இங்கிருந்தே இலங்கைக் கரையோரப் பகுதிகளான வேருவளை, களுத்துறை போன்ற பல பகுதிகளுக்கும் தன்னிச்சையாகச் சென்று வந்ததோடு— மெல்லமெல்ல இப்பகுதிகளில் இஸ்லாத்தையும் அன்பு வழியில் பரப்பிக் கொண்டு இப்பகுதிகளிலேயே சிலர் தங்களைக் குடியிருத்திக்கொண்டனர் என்றே டாக்டர் டென்ஹாம், சர்ஜோன் எமர்ஸன் போன்ற வரலாற்று விற்பன்னர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கின்றனர்.

இந்த ஒன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலும்— பத்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இம் முஸ்லிம்கள் தமிழகம் — இலங்கை போன்ற பகுதிகளில்—தமிழ் மக்களுடனேயே பின்னிப் பிணைந்து ஒன்றித்த வாழ்க்கை முறைகளை அணைத்துக் கொண்டதால் அன்று [illegible] அவர்கள் [illegible] தமை வாழவைத்த அழகு தமிழையும் — அதன் கலை கலாச்சாரங்களையும் ஒரே மனதுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

அதே நேரத்தில் தனிச் சிங்களப்பகுதிக்குள் வாழ வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்ட முஸ்லிம்கள் கூட, சிங்கள மக்களின் கலை கலாச்சாரத்தையோ — சிங்கள மொழியையோ தவறியும் கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை, விதண்டாவாதம் செய்யும் சிலர் நிச்சயமாக இந்த உண்மையை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். இது ஒன்றே போதும், முஸ்லிம்களுக்கும்— தமிழருக்கும் உள்ள நெருக்கமான உறவு முறைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதற்கு!

### தம் சொந்த வாழ்வுக்காக எதையும் செய்வார்கள்

ஆனால்—இன்று தம் வாய்ப்புக்களையும் — வசதிகளையும் பெருக்கிக்கொள்வதற்காக மட்டும் துடிதுடித்து நிற்கும் எம்மவர்களில் சிலர் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளுக்கு நல்ல பிள்ளைகளாக நடித்துக் கொள்ளவேண்டுமே என்பதற்காகக் கீர்த்தி மிக்க வரலாற்றின் தனித் தன்மைகளைத் தமக்குச் சாதகமான விலை மாதுகளாக்கியிருக்கின்றனர். கோடையின் கொடுமை தாங்காது படமெடுத்து நிற்கும் நல்ல பாம்பின் நிழலில் தவளை நிழல் தேடி அடைக்கலம் புகுந்த கதையாக — தனிச் சிங்கள வெறியாட்டத்தின் நிழலில் சுகம் காண இவர்கள் விழைகின்றார்கள்.

தமிழர்—முஸ்லிம் உறவு முறைச் சரித்திரங்களும் — எங்கே தம் முகமூடியைக் கிழித்துச் சுயரூபத்தைக் காட்டிக்கொடுத்து விடுமோ என்ற பயத்தாலும்—பீதியாலும்—அழித்தொழிக்கப் பட்டுக்கொண்டிருக்கும் தம் தாய்மொழியின் மேலான உணர்ச்சியைக் கூட மறந்து —'முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் தானா' என்ற ஒரு அரசியல் புரளியைக் கிளறிக்கொண்டிருக்கின்றனர்.

ஒரு-நாட்டின் அரசியல் வாதிகளின் நாவிலிருந்து மக்களின் தேவைக்கேற்ற புது புதுக்கருத்துக்களும் — புரட்சிகரமான எண்ணங்களும்தான் வெளிவரும்— வெளிவரவேண்டும். ஆனால் எம்மவர்களின் அரசியல் கருத்துக்களிலோ, எங்களின் தேவைகளுக்காக எதையும் செய்வோம் — சொல்வோம் என்ற நிலைகளைத்தான் பரவலாக வேதனையோடு நாம் பார்க்கின்றோம்; அண்டிப் பிழைக்கும் தம் ஈனத்தனமான வாழ்வுக்காகத் தாய் மொழிப்பாசத்தையே பலியிடத்துணிந்து விட்ட தம் அறிவீனத்தை எடுத்துக் காட்டி — ஒன்பது லட்சம் முஸ்லிம் பெருங் குடிமக்களை அரசியலில் உரிமைப்பசி உள்ளவர்களாக — அனாதைகளாக ஆக்கி விட்டிருக்கின்றார்கள்.

இலங்கை வாழ் இஸ்லாமிய மக்களின் தாய்மொழி அழகு தமிழேதான் என்ற கருத்தை தெய்வத்தாலும் கூட இன்று மறுக்கமுடியாது. எம்மைப் பெற்றெடுத்ததாய் எந்தமொழியில் எம்மைத் தாலாட்டிச் சீராட்டிப்பாலூட்டுகின்றாளோ—எந்த மொழியால் எம்மை அழைத்து அணைக்கின்றாளோ அதுவேதான் எமக்குத் தாய் மொழியாகின்றது என்பதை உலகப்பெரும் அறிஞர்களும்— மொழி வல்லுனர்களும் அன்றே ஒரே மனதுடன் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

இந்த உண்மையை இன்று யாரும் மறுக்கவோ—மறைக்கவோ முடியாது. அதே போன்று எமது தாய் எப்படி எல்லாம் தெய்வ உருவில் எமக்குக் காட்சி அளிக்கின்றாளோ — அது போன்றே தான் எம் தாய் கற்றுத் தந்த மொழியும் உலகோடு எம்மை இணைக்கும் ஒருதெய்வக் கருவியாக மொழி உருவில் அமைந்திருக்கின்றது. இந்த மேலான தத்துவத்தைச் சந்தர்ப்பத்திற்கேற்ப மறுப்பவர்கள் தம்தாய்ப் பாச உணர்ச்சிகளையே மறுப்பவர்கள் என்றுதான் நான் துணிந்து சொல்வேன்.

# 10 000 ரூபா பெறுமதியான நூல்களில் ஒரு நூலும் தமிழில் இல்லை

சிங்கள அரசாங்கம், தமிழ் மக்களைச் சமமாக நடாத்துகின்றது; சோசலிசத்தில் அனைவரும் சமம் என்று ஸ்ரீமாவின் சுவிசார அமைச்சர் குமாரசூரியர் நாளிலும் பொழுதிலும், நாளேடுகளில் நாகூசாது அறிக்கைக்கு மேல் அறிக்கை விடுகின்றார். மலையக இளைஞர் முன்னணியினரோ நாமே அரசு அரசே நாம் என்று சன்னி கண்டவன் போல் அலட்டி வருகின்றார்கள். அப்படி இப்படியாகப் பலதையும் பத்தையும் சொன்னால்தான் கிடைத்திருக்கும் கல்வி அதிபதிப் பதவியைக் கட்டிக் காக்கலாமென்று இரா சிவலிங்கம் கனவு காண்கிறார். நாமே அரசு என்று சமீபத்தில் நுவரெலியாவில் பேசிய பேச்சை மித்திரன் ஆசிரியத் தலையங்கம் அலசி அவர் கூற்றைச் சாடு சாடென்று அர்த்த புஷ்டியுடன் சாடியதையும் எவரும் மறக்க மாட்டார்.

மித்திரனின் காரசாரமான தாக்கைச் சகிக்க முடியாமல் திருப்பி மித்திரனுக்கும் கடிதம் எழுதித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார் இந்தச் சிவலிங்கம். தனது கூற்றை நுவரெலியாவில் வைத்தே கூறினார். நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மக்களின் தொகை பற்றிக் குமாரசூரியருக்கும் சரி சிவலிங்கத்திற்கும் சரியான கணக்குத்தெரியுமென்பதில் சதேகம் இருக்கவேண்டியதில்லை. நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரசினர் தமிழ் பாடசாலைகள் பற்றி சிவலிங்கம் தெட்டத் தெளிவாக அறிந்திருக்கிறார். தாம்தான் அரசு, சோசலிச அரசு தமிழருக்கும் உரிமை கொடுத்திருக்கின்றது என்று விருப்புப் பேசும் அரசாங்கத்தின் எடுபிடிகளே! எட்டப்பர்களே! எனது சின்னக் கேள்வி ஒன்றிற்குப் பதில் தருவீர்களா?

நுவரெலியா மாவட்டக் கல்வித் திணைக்களத்திற்கு, பாடசாலை நூல் நிலையங்களுக்கென வழங்கப்பட்ட தொகை தெரியுமா?

'ஆம்; நிறையத் தெரியும் தானே கல்வி அமைச்சில் கல்வி அதிகாரியாக இருக்கிறேனே எனக்குத் தெரியாதா?'

அப்படியானால் ஒதுக்கப் பட்டிருக்கும் தொகையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்?

'பத்தாயிரம் ரூபா'

இந்தப் பத்தாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் சமீபத்தில் கொடுக்கப்பட்ட போது எத்தனை ரூபா பெறுமதியான தமிழ் நூல்கள் கொடுக்கப்பட்டன?

'அது இரகசியம்; அரசாங்கத்தின் இரகசிய தகவல்களை வெளியில் கூறுவது பாவம்; மகாபாவம்.'

நீங்கள் தான், சிவலிங்கம் அவர்களே பதவியைக் காப்பாற்ற அந்த இரகசியத்தை வெளியிடக் கூடாதுதான். தலைமைத் தரகர் குமாரசூரியரும் இது பற்றி மூச்சுக்கூட விடமாட்டார்.

சரி, சாமானியனான நான் கூறுகின்றேன். திகைத்து விடாதீர்கள்.

நுவரெலியாக் கல்வித் திணைக்களத்திற்கு ஒதுக்கிய பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்களில் ஒரு நூல் தானும் தமிழ் நூல் இல்லை; இல்லை; இல்லவேயில்லை.

நுவரெலியாக் கல்வித் திணைக்கள விநியோகத்திலேயே இப்படிப் பாரபட்சமானால், அம்பாறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

இனிச் சொல்லுங்கள். இது நமது அரசுதானா? இப்படிச் சொல்லிக்கொள்ள வெட்கம், ரோசம், மானம் இல்லையா? ஒரு சிரட்டை நீரில் தற்கொலை செய்து விட்டால் என்ன? இனியும், மீண்டும், மீண்டும் அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்கும் வக்கீலாக மாறாமல் மலையக மக்கள் நல்வாழ்விற்காக உழையுங்கள்.

—அப்பலோ—

### உடபுசல்லாவை இ. தோ. கழக மாவட்டக் குழு

இ. தொ. கழகத்தின் உடப்புசல்லாவை மாவட்டக் குழுத் தேர்தல் கூட்டம் அண்மையில் இ. தொ. க. பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டப் பிரதிநிதி திரு. டி. வி. கருப்பையா உரையாற்றிய பின்னர், கீழ்க்கண்டோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப் பட்டனர்.

மாவட்டத்தலைவர் ஏ. கதிர்வேல், துணைத்தலைவர் கே. ஆறுமுகம், செயலாளர் எஸ். கே. வேலு துணை மாவட்டசெயலாளர் ஏ. வீரையா, மாவட்ட பொருளாளர் எம். செல்லையா, மாவட்டக்குழு உறுப்பினர்கள் — பேச்சிமுத்து, எஸ். மாரியப்பன் பிள்ளை, எம். சிவனு, ஆர். முத்துலிங்கம், ஏ. நாகமுத்து.

மாவட்ட வாலிப முன்னணித் தலைவராக எ. குழந்தைவேலும் செயலாளராக கணேசனும் தெரிவுசெய்யப் பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா தீபாவளி, ரம்ழான் வெளியீடு

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்நகர்) **ஈரோஸ்** (பாமன்கடை)

தினசரி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி 10.30—2.30—6.00—9.30 மணி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி

இதயத்தை உருக்கும் தாயின் அன்பு! அழகும், வலிமையும் அன்புக்கு நிகரில்லை!
தாய், தந்தை, சகோதரர்கள் மெச்சத்தகுந்த ஓர் சித்திரம்!
சிரிப்பும், அழுகையும் சரிவர நிறைந்த எல்லோரும் பார்க்கவிரும்பும் உன்னத நடிப்பு!

**ஜெயா, முத்துராமன், சாவித்திரி, சகுந்தலா, சோ, மனோரமா நடித்த—**

# பெத்த மனம் பித்து

**கடைசி 3 நாட்கள்** எம்.ஜி.ஆர். நடிக்கும் — **மாட்டுக்கார வேலன்**

---

## இப்பொழுது காட்சியளிக்கிறது

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்நகர்)



ஜெமினி, ஜெயந்தி,
முத்துராமன்,
நாகேஷ், M. R. R. வாசு,
A. சகுந்தலா —நடித்த—



கே. பாலசந்தரின் **புன்னகை**

---

## இப்பொழுது காட்சியளிக்கிறாள் செல்லமகால்



மற்றும் 4
சிலோன்
தியேட்டர்ஸ்
திரைகளில்

தேவன்
அழகக்கோன்
எஸ். வி. சுப்பையா
ஜெயகாந்
ராஜலக்ஷ்மி
லீலாரஞ்சனி
மற்றும் பலர்
—நடித்த—

எம். என். எம். புரடக்ஷன்ஸ்

# மீனவப் பெண்

யாரிப்பு:- கே. காதர் மீரா (முத்தலிப்)
கதை, வசனம், டைரக்ஷன்:- P. S. கிருஷ்ணகுமார்

---

## கொழும்பில் 2-வது மாதமாக
### கெயிட்டி திரையில்

தியாகங்கள் பலவகை!
காதலுக்காக முடிதுறந்து மன்னர்களும் தியாகம் புரிந்தனர் ஆனால்! இவள் செய்த தியாகமோ எந்த ஒரு பெண்ணும் இழக்கத்துணியாததை அவள் தியாகம் செய்தாள்! ஏன்? யாருக்காக?

கே. பாலசந்தரின்

# அரங்கேற்றம்

எஸ். வி. சுப்பையா
சிவகுமார்
சசிகுமார்
ஜெமினிமகாலிங்கம்



பிரமிளா
என். எம். ராஜம்
சுந்தரிபாய்
ஜெயசித்ரா

(பெரியவர்களுடன் வரும் இளையவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1973ம் வருடம் ஒக்டோபர் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org